# நிலவைக் களவு செய்

## 1

அந்த ஜம்போ ஜெட் விமானம் ஃப்ராங்ஃபர்ட் ஏர்போர்ட் ரன்வேயில், தன் சக்கரங்களைப் பதித்த போது - முட்டை வடிவ கண்ணாடி வழியே - சிவப்பு சூரியன் ஃப்ளம்ஸ் பழமாய்த் தெரிந்தது. ஜெயவர்த்தன் தனக்கு அருகில் உட்கார்ந்திருந்த மங்களேஷைக் கேட்டான்.

"இது காலையா, மாலையா?"

"ஒண்ணும் பிடிபடலை... விமானம் எக்கச்சக்க லேட்... நீயும் தூங்கிட்டே... நானும் தூங்கிட்டேன்..."

ஸ்பீக்கரில் ஏர்ஹோஸ்டஸ் கான்வென்ட் ஆங்கிலம் பேசினாள்: "இப்போது நாம் ஃப்ராங்ஃபர்ட் விமான நிலையத்தில்



இறங்கிக் கொண்டிருக்கிறோம். நேரம் காலை ஆறு மணி பத்து நிமிடம். வெளியே சீதோஷ்ண நிலை ஐந்து டிகிரி செல்ஸியஸ்."

விமானம் ராட்சஸப் பறவையாய் திரும்பியது. ஒவ்வொரு இரைச்சலாய் குறைத்துக் கொண்டு மௌனம் அனுஷ்டித்தது.

ஜெயவர்த்தனும் மங்களேஷும் எழுந்தார்கள். சிறிய சூட்கேஸ்களோடு விமான வாசலை நெருங்கி - பொம்மை மாதிரி நின்றிருந்த ஏர்ஹோஸ்டஸின் புன் சிரிப்பை இலவசமாய் பெற்றுக் கொண்டு படிகளில் இறங்கினார்கள்.

குளிர் முரட்டுத்தனமாய் முகத்தில் மோதியது.

புதிய தேசம். பழக்கப்படாத அன்னியக் குளிர். குளிரை தாஜா செய்துகொண்டே டெர்மினலை நோக்கி நடந்த ஜெயவர்த்தன், மங்களேஷ் இருவரும் இளைஞர்கள். வயது அநேகமாய் முப்பதுக்குள். இருபது மணி நேரத்திற்கு முன்பு மெட்ராஸில் சவரம் செய்த சதுர முகங்கள். இருவரும் ஜீன்ஸ் அணிந்திருந்தார்கள். மங்களேஷ் - 'ஐ ஆம் ஹார்ம்லெஸ்' என்கிற வாசகத்தோடு கூடிய முரட்டு பனியனிலும், ஜெயவர்த்தன் கட்டம், போட்ட சர்ட்டிலும் தெரிந்தார்கள்.

இரண்டு பேரும் மெட்ராஸிலிருந்து ஜெர்மனியில் இருக்கும் ஃப்ராங்க்ஃபர்ட்டுக்கு வந்திருந்தார்கள்.

விமான நிலையத்தின் மைதானம் போன்ற லௌன்ஞ் ஹாலுக்குள் நுழைந்தார்கள். நான்கைந்து எஸ்கலேட்டர்கள் நகர்வதே தெரியாமல் நகர்ந்து கொண்டிருக்க, ஒன்றில் தொற்றிக் கொண்டார்கள்.

விமான நிலையம் அதி பரபரப்பாய் இருந்தது. லௌன்ஞ்சின் மேற்கூரையில் ஒளிந்திருந்த ஸ்பீக்கர்கள் ஜெர்மன் பேசியது. சுவர்களில் கலர் கலராய் நூற்றுக்கணக்கில் விளம்பர

டெலிவிஷன்கள். கண்ணாடி ஷோ கேஸ்களில் மது வகைகளை, நிறம் நிறமாய் நிரப்பிக் கொண்ட பாட்டில்கள், உயரமாய், ஒடிசலாய் - உருவி விட்ட உடம்புவாகோடு ஜெர்மானியப் பெண்கள் செம்பழுப்பு முடிக்கற்றைகள் அசைய எல்லாத் திசைகளிலும் தெரிந்தார்கள்.

''ஒவ்வொருத்தியும் எப்படி இருக்காளுக...'' மங்களேஷ் சொல்ல ஜெயவர்த்தன் கண்ணடித்தான்.

''ஜொள்ளு விடாதே...! நாம எதுக்காக வந்திருக்கோம்ங்கிறதை... ஒருவாட்டி ஞாபகப்படுத்திக்கோ...''

''கட்டுப்படுத்திக்க முடியலையே... அந்த ரெட் ஸ்கர்ட் காரியைப் பார். முட்டிக்கு மேல தொடை இரண்டும் தெரியற மாதிரி ட்ரஸ்.... அம்மாடி...! அது சலவைக் கல்லா... இல்ல தொடையா...?''

''மங்களேஷ் வேண்டாம்...''

எஸ்கலேட்டர் அவர்களை கீழ் ஹாலுக்குக் கொண்டு வந்து சேர்க்க - இருவரின் சூட்கேஸ்களும் அடையாள அட்டையோடு காத்திருந்தன. கஸ்டம்ஸில் இருந்த பெண்கள் பூசிய லிப்ஸ்டிக் அழிந்து விடாமல் முகம் பார்த்து மொழி பேசினார்கள்.

இவர்களைப் பார்த்ததும் கேட்டார்கள்.

''இண்டியா...?''

''எஸ்...''

பாஸ்போர்ட்டையும் விசா காகிதங்களையும் சரி பார்த்து - முத்திரை குத்தினாள். மங்களேஷ் தன் இடது கையின் ஆட்காட்டி விரலால் - ஜெயவர்த்தனின் இடுப்பைக் குத்தி



விட்டு சொன்னான். ''ஸ்ரீவில்லிபுத்தூர் பால் கோவா மாதிரி இருக்கா...''

''வேண்டாம். சப்பு கொட்டாதே...''

அவள் நிமிர்ந்தாள். ''உங்கள் சூட்கேஸ்களைத் திறந்து காட்ட முடியுமா...?''

''தாராளமாய்.''

சாவியை உபயோகப்படுத்தி - சூட்கேஸின் லாக்கர்களை 'ப்ளக் ப்ளக்' - என்று திறந்து விரித்தார்கள். ''வெறும் உடைகள். ஜியாலஜி சம்பந்தப்பட்ட புத்தகங்கள்.''

''நீங்கள் இங்கே வந்ததற்குக் காரணம்...?''

''ஜியாலஜி.. சம்பந்தப்பட்ட சில தகவல்களை சேகரிக்கத் தான்...''

''எத்தனை நாள் தங்குவீர்கள்...?''

''சரியாய் ஒரு வாரம்...''

''எங்கே தங்குவீர்கள்...?''

''ஹோட்டல் க்ரீனிஷ் கார்டன்...''

கஸ்டம்ஸில் இருந்த பெண் - ஜியாலஜி சம்பந்தப்பட்ட புத்தகங்களைப் பார்த்துவிட்டு சூட்கேஸை மூடினாள். ''போய் வாருங்கள்... விஷ் யூ ஆல் த பெஸ்ட். இந்தியா போய் சேர்ந்து ஏதாவது ஒரு கட்டுரை எழுதும் சமயத்தில் எங்கள் நாட்டைப் பற்றி உயர்வாய் எழுதுங்கள்.''

''கண்டிப்பாய்...''

சூட்கேஸ்களோடு வெளியே வந்தார்கள். குளிர் எலும்புகளைத் தாக்கியது. ''அம்மாடி! இதென்ன குளிரா...? கோணி ஊசியா...?''

''கொஞ்ச நேரத்துல குளிர் பழகிடும்.''

''காப்பி சாப்பிடலாமா?'' - ஸ்... ஸ்...ஸென்று நீராவியோடு புகைந்து கொண்டிருந்த - எஸ்ப்ரஸ்ஸோ 'காப்பி மெஷினை'க் காட்டியபடி கேட்டான் மங்களேஷ்.

''எனக்கு காப்பி வேண்டாம்.. நீ வேணும்ன்னா குடிச்சிட்டிரு! நான் ஐ.எஸ்.டி. சர்வீஸ்ல மெட்ராஸுக்கு ஒரு போன் பேசிட்டு வந்துடறேன்...''

''யார்க்கு...?''.

''வேற யாருக்கு...? பாஸுக்குத்தான்...! ஃப்ராங்ஃபர்ட் வந்து சேர்ந்துட்டோம்னு சொல்ல வேண்டாமா...?''

''ஹோட்டலுக்குப் போய் போன் பண்ணிக்கலாமே!''

''வேண்டாம். ஹோட்டல் ஃபோன் சிஸ்டம் வேற மாதிரி இருக்கும். எதுவும் பிரைவஸியாப் பேச முடியாது....''

''சரி... சீக்கிரம் பேசிட்டு வா... லேட் பண்ணிடாதே...'' மங்களேஷ் எஸ்ப்ரஸ்ஸோ காப்பி மெஷினை நோக்கிப் போக - ஜெயவர்த்தன் எதிரில் இருந்து ஐ.எஸ்.டி. டெலிஃபோன் பூத்தை நோக்கிப் போனான்.

பூத்தில் நுழைந்து கண்ணாடிக் கதவைச் சாத்திக் கொண்டு டெலிஃபோன் ரிஸீவரை எடுத்து 'பே-அட்-மெட்ராஸ்' முறையில் சென்னையைத் தொடர்பு கொண்டான். மறுமுனையில் ஒரு பெண் பேசினாள்.

''ஹலோ...''

''யாரு... சாருமதியா?''

''ஆமா.''

''நான் ஜெயவர்த்தன் பேசறேன்...''



''ஃப்ராங்ஃபர்ட்டிலிருந்துதானே...?''

''ஆமா... ஃப்ளைட் எக்கச்சக்க லேட்... இப்போ இங்கே எர்லி மார்னிங்...''

''மங்களேஷ் உங்க பக்கத்துல இல்லைன்னு நினைக்கிறேன்.''

''இருந்தா பேச முடியாதே...!''

''ஏர்போர்ட்டிலிருந்தா ஃபோன் பண்றீங்க...?''

''ஆமா... அவன் பக்கத்து கபேடீரியாவில் காப்பி குடிச்சிட்டிருக்கான். அந்த சந்தர்ப்பதைப் பயன்படுத்திக்கிட்டு தான்.. இப்ப உன்கிட்டே பேசிக்கிட்டிருக்கேன்.''

''சரி. மங்களேஷை எப்படித் தீர்த்துக் கட்டறதுன்னு முடிவு பண்ணிட்டீங்களா?''

''மனசுக்குள்ளே திட்டம் இருக்கு...''

''பார்த்து...! எந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினாலும் சரி அதுல நிதானம் இருக்கட்டும்... போலீஸ்ல மாட்டிக்கிற மாதிரி எதையும் பண்ணிடாதீங்க...''

''நீ கவலையே படாதே...! கேக்கைத் துண்டு போட்ட மாதிரி திட்டம் துல்லியமாக இருக்கு. நிலவு என் கைக்கு வர்ற வரைக்கும் மங்களேஷுக்கு ஆயுள். காரியம் முடிஞ்சதும் உடனே உனக்கு ஃபோன் பண்றேன்...''

''ப்ச்ச்...''

''என்னது...?''

''முத்தம்..''

''இன்னொண்ணு குடு...''

''ப்ச்ச்ச்...''

''போதும்... போதும்... ரிஸீவரே தெறிச்சிடும் போலிருக்கு...''

''ஆமா... உங்க பாஸ்க்கு ஃபோன் பண்ணிட்டீங்களா?''

''இனிமேத்தான்... நீ ரிஸீவரை வெச்சுடு...! காரியம் முடிஞ்சதும் ஃபோன் பண்றேன்...''

அவள் மறுமுனையில் ரிஸீவரை வைத்ததும் - ஜெயவர்த்தன் கண்ணாடி பூத் வழியே - சற்றுத் தொலைவில் காகித டம்ளரில் இருந்த காப்பியை சப்பியபடி பெண்களைப் பார்வையால் மென்று கொண்டிருந்த மங்களேஷை ஒரு புன்னகையோடு பார்த்துவிட்டு, மறுபடியும் டெலிஃபோனில் சென்னையைத் தொடர்பு கொண்டான்.

இம்முறை ஆண்குரல்.

''ஹலோ...'' அவனுடைய பாஸ் நவமணி குரல் கொடுத்தார்.

''பாஸ்! நான் ஜெயவர்த்தன்...''

''ஃப்ராங்ஃபர்ட்டிலிருந்தா பேசறே...?''

''ஆமா பாஸ்.. ப்ளைட் எக்கச்சக்க லேட். இப்பத்தான் லேண்ட் ஆனோம்...''

''பயணத்துல எந்தப் பிரச்சனையும் இல்லையே...?''

''இல்ல பாஸ்...''

''நீயும் மங்களேஷும் 'ஜியாலஜிஸ்ட்'ன்னு சொன்னதை கஸ்டம்ஸ்ல நம்பிட்டாங்களா?''

''சுலபமா நம்பிட்டாங்க...''

''நிஷாவை எப்பப் பார்க்கப் போறீங்க...?''

''ஹோட்டலுக்குப் போய் ரூம் எடுத்து - குளிச்சு சாப்பிட்டதுமே புறப்படறோம் பாஸ்!''



''அட்ரஸ் பத்திரம்...''

''நீங்க கவலையே படாதீங்க பாஸ்...''

''மறுபடியும் எப்ப ஃபோன் பண்றே...?''

''நிஷாவை சந்தித்துப் பேசின பின்னாடி...''

''சரி, மங்களேஷ்கிட்டே ரிஸீவரைக் குடு...''

''அவன் கபேடீரியாவில் காப்பி சாப்ட்டுருக்கான்... கூப்பிடவா பாஸ்...?''

''வேண்டாம்! வேற விசேஷம் ஏதும் இல்லையே...?''

''இல்ல பாஸ்.''

''ஞாபகம் இருக்கட்டும். அடுத்த வாரத்துக்குள்ளே நிலவு நம்ம கைக்கு வந்தாகணும்...''

''கண்டிப்பா வரும் பாஸ்....''

மறுமுனையில் ரிஸீவர் வைக்கப்பட்டுவிட ஜெயவர்த்தனும் ரிஸீவரை கொக்கியில் மாட்டிவிட்டு கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு வெளிப்பட்டான். காப்பி சப்பிக் கொண்டிருந்த மங்களேஷை நோக்கிப் போனான்.

''ஏண்டா... இன்னுமா சாப்பிட்டு முடியலை...?''

''காப்பி ரொம்ப சூடு....''

''காப்பி சூடில்லை. நீதான் சூடு. வர்ற போற பொண்ணை ஏண்டா இப்படி வெறிச்சுப் பார்க்கிறே...?''

''ஒவ்வொருத்தியும் அம்சம்...! கொஞ்ச நேரத்துக்கு முந்தி ஒருத்தியை நீ பார்த்திருக்கணும்...''

''ஏன்... அவளுக்கென்ன?''

''ஏறக்குறைய டாப்லெஸ்ஸா போனா...! என்னோட உடம்பு ரத்தம் பூராவும் பாய்லிங் ஸ்டேஜுக்கு வந்துடுச்சு...''

''நீ 'எயிட்ஸ்' வந்து சாகப் போறே...! காப்பி குடிச்ச வரைக்கும் போதும் டம்ளரை வீசிட்டு வாடா...''

''இதோ ஆச்சு...'' காலி டம்ளரை 'வேஸ்ட் பின்'னில் நசுக்கி வீசிவிட்டு சூட்கேஸைத் தூக்கிக் கொண்டான்.

''பாஸ்கிட்ட பேசிட்டியா?''

''பேசிட்டேன்...''

''என்ன சொன்னார்...''

''வழக்கம்போல் பத்திரம் சொன்னார். நிஷாவை எப்பப் பார்க்கப் போறீங்கன்னு கேட்டார். ஹோட்டலுக்குப் போய் ரூம் எடுத்துக் குளிச்சு சாப்பிட்டுப் போய்ப் பார்க்கிறோம்ன்னு சொன்னேன்.''

''டேய் ஜெயா...''

''ம்...''

''அந்த நிஷா எப்படியிருப்பா....?''

''யாருக்குத் தெரியும்..? உன்னை மாதிரித்தான் நானும்..''

''பேரைப் பார்த்தா... கிளுகிளுப்புத் தட்டற மாதிரி இருக்கு இல்ல?''

''சரியான ஜொள்ளு பார்ட்டிடா நீ...''

விமான நிலையத்தை விட்டு வெளியே வந்தார்கள். போக்குவரத்து இரைச்சல் அந்தக் காலை நேரத்திலும் 'ஓ'வென்று இருந்தது. வரிசையாய் டாக்ஸிகள். சாலையின் மையத்தில் வாகனங்கள் 'விஷ் விஷ்' என்று பறந்தன.

மங்களேஷ் வியந்தான்.

''அடேங்கப்பா! ஊரே தீபாவளி மாதிரி இருக்கு.''



செம்பழுப்பாய் மீசை வைத்து - தலையில் தொப்பியும், உடம்பில் கம்பளிக் கோட்டும் அணிந்த ட்ரைவர் ஒருவன் அவர்களை மறித்தான்.

''டாக்ஸி...?''

''எஸ்...''

''ப்ளீஸ்... கம்...''

வரிசையில் இருந்த கார்க்கு கூட்டிப் போனான். படு மாதிரியான டயோட்டா கார். உள்ளே போய் புதைந்து உட் கார்ந்தார்கள்.

ட்ரைவர் இக்னீஷியனை உசுப்பிக் கொண்டே அரைகுறை ஆங்கிலத்தில் கேட்டான்.

''எங்கே போக வேண்டும்...?''

''ஹோட்டல் க்ரீனிஷ் கார்டன்...''

''நல்ல ஹோட்டல்...'' சிரித்து காரைக் கிளப்பினான் எடுத்த எடுப்பிலேயே சரியான வேகம். இருவரும் சாய்ந்து உட்கார்ந்தார்கள். ரோடு எண்ணெயாய் வழுக்கியது. விமான நிலைய எல்லையைத் தாண்டியதும் பெரிய பெரிய கட்டிடங்கள் கண்ணாடி ஜன்னல்களோடு மின்னின. கட்டிடங்களின் உச்சிகளில் ஆயிரக்கணக்கான டெலிவிஷன் ஏரியல்கள். அதில் பாதி டிஷ் ஆண்டெனாக்கள். ரோட்டின் இரண்டு பக்கங்களிலும் கெட்டியான பச்சை நிறத்தில் இரண்டு மீட்டர் அகலத்தில் விடாப்பிடியாய் தொடர்ந்து வந்தது. ரோட்டின் குறுக்கே தொங்கும் ட்ராஃபிக் சிக்னல்கள் போக்குவரத்தை ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்க நகரமே யார்க்கோ கட்டுப்பட்ட மாதிரி சுத்தமாய் தெரிந்தது.

ட்ரைவர் திரும்பிப் பார்த்துக் கேட்டான்.

''ம்யூஸிக் ஏதாவது கேட்கிறீர்களா...?''

''வேண்டாம்...'' ஜெயவர்த்தன் சொன்னான்.

''டி.வி...''

மங்களேஷ் ''போடு'' என்றான்.

ட்ரைவர் ஒரு ஸ்விட்சைத் தட்ட - ஸ்டீயரிங்குக்கு இடதுபுற மாய் சற்று மேலே இருந்த அந்தச் சிறிய டி.வி. திரை இள நீல நிறத்தில் உயிர் பெற்றது. ரக்பி விளையாட்டில் இரண்டு கோஷ்டிகள் தீவிரமாய் மோதிக் கொண்டிருந்தன.

''ஸ்போர்ட்ஸ் வேண்டாம். வேறு சேனல் மாற்று.'' ரக்பியை தொலைத்துவிட்டு - ஒரு பாடகியைக் காட்டியது. கையில் உருண்டை மைக்கோடு அழகாய் இருந்த அந்த இளம் பெண், பாதி மார்புகளைக் காட்டிக் கொண்டு உதடுகளை ஜீரோ வடிவமாக்கி ஜெர்மன் மொழியில் பாடினாள்.

மங்களேஷ் பரவசமாகி ''இதே சேனல் இருக்கட்டும்'' என்றான்.

ஜெயவர்த்தன் சிரித்துவிட்டு ட்ரைவரிடம் கேட்டான்:

''ஹோட்டல் க்ரீனிஷ் கார்டன் இங்கிருந்து எவ்வளவு தூரம்?''

''சரியாய் முப்பத்திரண்டு கிலோ மீட்டர்கள்.''

கார் ஐந்து நிமிஷம் ஓடியதும் - சாலை இப்போது ஒரு கிராமத்துக்குள் புகுந்துவிட்ட மாதிரி சுற்றிலும் மரங்கள் கொஞ்சம் வயல்வெளிகள்.

மங்களேஷ் டி.வி. திரையில் இருந்த பெண்ணை மறந்து விட்டு - ''இடம் அற்புதமாய் இருக்கே...?'' என்றான்.

ட்ரைவர் கேட்டான்.



''காரை ஓரமாய் நிறுத்தட்டுமா?''

''நிறுத்து...!''

''டேய்... மங்களேஷ்...! எதுக்கு நிறுத்தச் சொல்றே?''

''இடம் ப்யூட்டிஃபுல்லா இருக்கு... இறங்கி ஒரு ரெண்டு நிமிஷம் பார்த்துட்டுப் போலாம்...''

கார் ரோட்டோரமாய் நின்றது.

மங்களேஷ் முதல் ஆளாய் இறங்க - ''உன் கூடப் பெரிய ரோதனைடா...'' என்று தலையில் அடித்துக் கொண்டு ஜெய வர்த்தன் இறங்கினான்.

ஆள் நடமாட்டம் இல்லை. சுற்றிலும் அடர்த்தியான மரங்கள். அவைகளின் உச்சந்தலைகளில் அடர்த்தியான சிவப்பில் செம்பருத்தி சைஸ் பூக்கள்.

மங்களேஷ் கேட்டான்.

''அது என்ன பூக்கள்?''

''ட்யூலிப் ஃப்ளவர்ஸ்... குளிர்காலத்தில் மட்டுமே பூக்கும்.''

''அதுவரைக்கும் போய்விட்டு வரலாமா?''

''வேண்டாம்... இந்த போர்டைப் பாருங்கள்.''

இரண்டு பேரும் பார்த்தார்கள். ஜெர்மன் மொழியில் இரண்டு வரி தெரிந்தது.

''மொழி எங்களுக்குத் தெரியாது. இந்த போர்டில் என்ன எழுதப்பட்டிருக்கிறது?''

ட்ரைவர் சொன்னான்.

''மரங்களுக்குப் பக்கமாய் உள்ள மணல்பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம். அங்கே புதை குழிகள் உள்ளன...''

இரண்டு பேரும் அந்த மணல் பரப்பைப் பார்த்தார்கள்... அது சாதுவாய் தெரிந்தது.

''பார்க்கிறதுக்கு புதை மணல் குழி மாதிரியே தெரியலையே?'' - ஜெயவர்த்தன் ஆச்சர்யக் குரலில் சொல்ல - ட்ரைவர் கீழே குனிந்து - ஒரு பெரிய சைஸ் கல்லை எடுத்து அந்த மணல் பரப்பில் வீசி எறிந்தான்.

இரண்டு விநாடி நேரம்கூட இல்லை. மணல் சரசரவென்று சரிந்து கல்லை உடனே இழுத்துக் கொண்டது.

மங்களேஷ் மூச்சை இழுத்துப் பிடித்து வியந்தான். ''ஒரு கல் விழுந்ததற்கே இப்படியென்றால், ஒரு ஆள் விழுந்தால் என்னவாகும்?''

ட்ரைவர் சிரித்துக் குறுக்கிட்டான். ''அதையும் பரீட்சித்துப் பார்த்துவிடலாமா...?''

''எப்படி...?''

மங்களேஷ் கேட்க - டாக்ஸி ட்ரைவர், தனக்குப் பக்கத்தில் நின்றிருந்த ஜெயவர்த்தனை கை காட்டினான்.

''இவரைத் தூக்கி அதில் போட்டால் போயிற்று...''

ஜெயவர்த்தன் திகைத்துக் கொண்டிருக்கும்போதே - டாக்ஸி ட்ரைவர் தன்னுடைய ஓவர்கோட்டின் பாக்கெட் பகுதியிலிருந்து - அந்த ரிவால்வரை எடுத்தான்.

ஓஃப்தான்ஸா ரிவால்வர். இரட்டை மூக்கோடு சற்று அதிகப்பிரசங்கித்தனமாய் தெரிந்தது.

'ஏதோ விபரீதம்... தப்பித்தாக வேண்டும்!' - என்ற உள்ளுணர்வு உசுப்ப ஜெயவர்த்தன் விநாடி நேரத்திற்குள் முடிவுக்கு வந்து ட்ரைவர் மேல் பாய்ந்தான்.

'ரெக்...!'



இந்தப் பாய்ச்சலை எதிர்பார்க்காத ட்ரைவர் அடிவயிற்றில் உதை பட்டு கீழே உருண்டான். கையிலிருந்து ஓஃப்தான்ஸா ரிவால்வர் எகிறிப்போய் ஒரு குற்றுச் செடியின் மேல் விழுந்தது. ஜெயவர்த்தன் கீழே விழுந்து கிடந்த ட்ரைவரை அமுக்கிப் பிடித்துக் கொண்டு கத்தினான்.

''மங்களேஷ் அந்த ரிவால்வரை எடுத்துக்கோ...''

அவன் ஓடிப்போய் எடுத்துக் கொண்டான்.

ஜெயவர்த்தன் ட்ரைவரை இரண்டு கைகளால் தூக்கி நிறுத்தினான். சட்டென்று அந்த வித்தியாசம் பிடிபட்டது.

ஒரு ட்ரைவரின் உடம்பு 'மெத்'தென்று இப்படியா இருக்கும்?

கை இடுப்புப் பக்கமாய் போனபோது - அதன் வளைவும் பரிமாணமும் தெரிந்தது. தொப்பியை உருவினான்.

பாப் தலை.

செம்பழுப்பு மீசையின் மேல் கையை வைக்க - அது பசையோடு பிரிந்து வந்தது. கனமான ஓவர்கோட்டின் பட்டன்களை விலக்கினான்.

பெண் என்பது அப்பட்டமாய் புரிந்து போயிற்று. குரலை மாற்றி ஆண் மாதிரிப் பேசியிருக்கிறாள்.

''மங்களேஷ்! பார்த்தியா... ட்ரைவர் ஒரு பொண்ணு...''

மங்களேஷின் முகம் இறுகியிருந்தது.

''அது... எனக்கு ஏர்போர்ட்டிலேயே தெரியும்.''

''எ... என்னது?''

''எஸ்.. தெரியும்... இன்னொண்ணையும் சொன்னா நீ ரொம்பவும் ஆச்சரியப்படுவே...! நாம யாரை பார்க்கிறதுக்காக ஃப்ராங்ஃபர்ட்டுக்கு வந்திருக்கோம்...?''

''நிஷாவை...''

''அந்த நிஷா இவதான்...''

ஜெயவர்த்தன் அதிர்ச்சிக்குள் விழ மங்களேஷ் சிரித்தான்.

''அவளை விடு... ஜெயா...''

''ம... ம... மங்களேஷ்!''

''நிஷாவை விடுன்னு சொன்னேன்.''

விட்டான்.

அவள், அந்த விநாடியே ஓடிவந்து - மங்களேஷுக்குப் பக்கத்தில் நின்று கொண்டாள். மங்களேஷ் ரிவால்வரை உயர்த்தினான். குரல் முற்றிலுமாய் மாறியிருந்தது.

''டேய்... ஜெயா... ஹைவேஸ் ரோட்டிலிருந்து ஒரு மண் ரோடு பிரிஞ்சு வேற ஒரு ஊருக்குப் போற மாதிரி.... நாம போட்ட திட்டம் இங்கிருந்து திசை மாறுது. நம்ம பாஸ் நவமணிக்கு நீ விசுவாசமா இருக்கலாம். ஆனா என்கிட்ட அந்த விசுவாசம் கிடையாது. அந்த நிலவை எனக்கும் நிஷா வுக்கும் மட்டுமே சொந்தமாக்கிறதாய் முடிவு பண்ணி... பத்து நாளாச்சு...''

''ம... மங்களேஷ்...!''

''உன்னைப் பொறுத்தவரைக்கும் நான் ஒரு ஜொள்ளு பார்ட்டிதான். ஆனா... நிஷாவுக்கு நல்ல பார்ட்டி. பத்து நாளைக்கு முந்தி நிஷா இந்தியாவுக்கு வந்ததும் நவமணியைப் பார்த் ததும் உனக்குத் தெரியாது. ஆனா, எனக்குத் தெரியும்... நவமணிக்கு இனிமேலும் சம்பாதிச்சுக் குடுக்கக் கூடாதுங்கிற முடிவில், நானும் நிஷாவும் தனியா தொழில் தொடங் கிட்டோம். எங்களோட முதல் பிஸினஸே அந்த 'நிலவு'தான்.



உன்னை இந்த ரிவால்வர்ல சுட்டு சவமாக்கி, அந்தப் புதை குழியில தள்ளி - எங்க தொழிலுக்குப் பூஜை போடறோம்...''

''ம... மங்களேஷ்.. வே... வேண்டாம்...''

ஜெயவர்த்தன் வியர்த்துப் பின்னுக்கு நகர்ந்தான்.

''வேண்டாம்ன்னா எப்படி... ஜெயா... பாஸ் நவமணிக்கு நீ ரொம்பவும் வேண்டப்பட்ட ஆளு... அவரோட விஸ்கியை குடிச்சு வளர்ந்தவன் நீ. நீ உயிரோடு இருந்தா அது எனக்கு எவ்வளவு பெரிய உபத்திரவம்.''

ஜெயவர்த்தன் கைகளை ஆட்டினான். ''மங்களேஷ்... நான்.. சொல்றதைக் கேளு... நானும் உன்னை மாதிரி...''

சொல்லிக் கொண்டிருக்கும்போதே ரிவால்வரின் ட்ரிக்கரை சுண்டினான் மங்களேஷ். தோட்டா ஒன்று சத்தமில்லாமல் ஜெயவர்த்தனின் மார்புக்குள் பிரவேசம் செய்ய, அந்த விநாடியே ரத்தம் கொப்பளித்து ஒரு குற்றுச் செடியின் மேல் சரிந்து விழுந்து நிசப்தமானான்.

நிஷாவும் மங்களேஷும், ஜெயவர்த்தனின் உடம்பை நெருங்கிப் புரட்டினார்கள். தலைமாட்டையும் கால்மாட்டையும் பிடித்தார்கள். தூக்கிக் கொண்டுபோய் அந்தப் புதைகுழியில் எறிந்தார்கள்.

''த்தொப்...''

உடல் விழுந்ததுமே - அதற்காகவே காத்திருந்த மாதிரி மணல் சரசரவென்று சரிந்து உடலை உள்ளிழுக்க ஆரம்பித்தது.

பத்து விநாடிகள்தான்!

ஜெயவர்த்தன் இல்லை.

# 2

அதே விநாடிகளில்...

சென்னை பாந்தியன் சாலையில் உள்ள ஒரு பங்களாவில் ஏ.ஸி. காற்றைச் சுவாசித்தபடி உட்கார்ந்திருந்த நவமணி இண்டர்காம் ரிஸீவரை எடுத்து ஒரு பட்டனைத் தட்டிவிட்டுப் பேசினார்.

"அருள்! ஒரு நிமிஷம் என்னோட ரூமுக்கு வந்துட்டு போ" - பேசிவிட்டு ரிஸீவரை வைத்த நவமணிக்கு ஐம்பது வயது இருக்கலாம். சந்தன நிற ஜிப்பாவும் அதே நிற வேஷ்டியும் அணிந்து நெற்றியில் குங்குமப்பொட்டைக் காட்டினார். மண்டை இலையுதிர் காலத்தில் இருந்தது. பற்களில் தாம்பூலம் அரை பட்டது.

அருள் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான். இளைஞன்; சற்று நீண்ட முகம்; மீசையைக் கட்டைவிரல் பருமனுக்கு வளர்த்திருந்தான். ஸ்டோன்வாஷ் பேண்ட்டிலும் - தொள தொளா வெள்ளை சர்ட்டிலும் ஒரு கல்லூரி மாணவர்க்குரிய தோற்றத்தைக் காட்டினான்.

"ஸார்..."

"வா... அருள்... அப்படி உட்கார்..."

எதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தான். நவமணி மேஜையின் மேலிருந்த வெள்ளை டப்பியை எடுத்து, அதற்குள் இருந்த வாசனைப் புகையிலையைக் கொஞ்சமாய்க் கிள்ளி வாயில் போட்டுக் கொண்டே சொன்னார்.



"ஜெயவர்த்தன் பத்து நிமிஷத்துக்கு முந்தி போன் பண்ணியிருந்தான்... ஃப்ராங்ஃபர்ட் ஏர்போர்ட்டிலிருந்து..."

அருள் பதிலுக்கு ஏதும் பேசாமல் அவரே பேசட்டும் என்று காத்திருந்தான். நவமணி புகையிலை வாசனையோடு தொடர்ந்தார்.

"ஜெயவர்த்தன் ஃபோன் பண்ணும்போது பக்கத்துல மங்களேஷ் இல்லை. மங்களேஷ் எங்கேன்னு கேட்டா... கபேடீரியாவில் காப்பி குடிச்சிட்டிருக்கான்னு சொன்னான். மேலோட்டமாப் பார்க்கப் போனா இது ஒரு சாதாரண சம்பவம்தான். ஆனா, எனக்கு கொஞ்சம் உறுத்தலா இருக்கு..."

"எப்படி ஸார்..."

"மங்களேஷ் காப்பி குடிச்சிட்டிருக்கும்போது ஜெயவர்த்தன் தனியா ஃபோன் பண்ணியிருக்கான். அதாவது தனியா ஃபோன் பண்ண விரும்பியிருக்கான். மங்களேஷ் காப்பி குடிச்சிட்டிருக்கும்போது அந்த விருப்பத்தை செயல் படுத்தியிருக்கான்..."

"அப்படியே இருந்தாலும் ஜெயவர்த்தன் உங்களுக்குத் தானே ஃபோன் பண்ணியிருக்கான்."

நவமணி புகையிலைக் கறைப் பற்களைக் காட்டி மெல்லச் சிரித்தார். "ஜெயவர்த்தன் எனக்கு மட்டும் ஃபோன் பண்ணியிருக்க மாட்டான். என்னைத் தவிர வேற ஒருத்தருக்கும் ஃபோன் பண்ணத்தான் மங்களேஷைக் கபேடீரியாவில் விட்டுட்டு அவன் தனியா வந்திருக்கான்..."

"இப்ப புரியுது ஸார்..."

"ஸோ ஜெயவர்த்தன்கிட்டே ஏதோ தப்பு இருக்கு... அந்தத் தப்பை உடனடியாக் கண்டுபிடிச்சாகணும்... இல்லேன்னா நாம போட்டிருக்கிற திட்டம், கைக்கு வரவேண்டிய அந்த நிலவு எல்லாமே கனவாயிடும்..."

"இப்ப என்ன பண்றது...?"

"ஜெயவர்த்தன் அங்கே இருக்கும்போது... இங்கே உட்கார்ந்து கிட்டு நாம எதுவுமே பண்ண முடியாது... அதனால..."

"........"

அவரே தொடர்ந்தார். "அதனால.. இன்னும் ரெண்டு நாள்ல நீயும் ஃப்ராங்ஃபர்ட்டுக்கு புறப்படறே...! அவங்க தங்கியிருக் கிற ஹோட்டலுக்குப் பக்கத்திலேயே ஏதாவது ஒரு ஹோட் டல்ல தங்கிட்டு ஜெயவர்த்தனைக் கண்காணிக்கிறே...! அவன் கிட்ட தப்பு இருந்தா உடனே எனக்கு ஃபோன் பண்றே...!"

"எஸ்... ஸார்..."

"ஃப்ராங்ஃபர்ட் போக டிக்கெட் எடுத்துரு. பாஸ்போர்ட்டை பத்திரமா வெச்சிருக்கியா இல்லையா?"

"வெச்சிருக்கேன் ஸார்..."

"டிக்கெட்டுக்கு ஏற்பாடு பண்ணு போ..."

அருள் எழுந்தான்.

## 3

**கா**ர் 'க்ரீனிஷ் கார்டன்' ஹோட்டலுக்கு முன்பாய் நின்றது. பிரம்மாண்டமான ஹோட்டல். மாடிகள் எவ்வளவு என்று எண் ணிப் பார்க்க... ஒரு பத்து நிமிஷத்தை செலவழிக்க வேண்டிய கட்டாயம். கீழ்த்தளம் பூராவும் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸாய் மாறியிருந்தது. ராட்சஸ கண்ணாடி ஷட்டர்களுக்கு அப்பால் புதிதாய் கார்கள், ட்ரக்குகள், அன்றைய நாகரீகத்தின் சுடச்சுட சாதனங்கள்.



"நிஷா"

மங்களேஷ் கூப்பிட்டான்.

"ம்..."

"நாம மறுபடியும் எப்பப் பார்க்கலாம்?"

"ரெண்டு மணி நேரம் கழிச்சு... என்னோட வீட்டுக்கு வர் துருங்க... திட்டத்தை செதுக்குவோம்."

"நிஷா... என் மனசுக்குள்ளே இப்போ புதுசா ஒரு பயம் நுழைஞ்சிருக்கு..."

"என்ன..?"

"ஜெயவர்த்தனை சாகடிச்ச விஷயம் வெளியே வராதே...?"

"வராது... வர வாய்ப்பே இல்லை... போலீஸை மறந்துடுங்க நவமணியை மட்டும் மனசுல வெச்சுக்குங்க... ஃபோன்ல அவரை நீங்க சமாளிச்சா போதும்..."

பின்னால் கார் ஹார்ன் சத்தம் கேட்டது.

"இறங்குங்க... மங்களேஷ்.. மத்ததை அப்புறமா பேசிக்க லாம்... இப்படி நெர்வஸ்ஸா இருக்காதீங்க... நெர்வஸ்தான் காரியத்தைக் கெடுத்துரும்."

மங்களேஷ், லக்கேஜ்களோடு இறங்கிக் கொள்ள, நிஷா கையசைத்துப் பறந்தாள்.

மங்களேஷ் உள்ளே நுழைந்தான்.

வரவேற்பறை படு சுத்தம். பளிங்குத் தரை அவனைப் பிரதி பலித்து ஒரு ஜெராக்ஸ் காபி மாதிரி காட்டியது. கௌண்ட ருக்குப் பின்னால் அந்தப் பெண் சிரித்தாள். இரண்டு கன்னங் களிலும் ரோஜா பூக்க - "குட்மார்னிங்..." சொன்னாள்.

அவஸ்தையாய் புன்னகைத்தான் மங்களேஷ்.

அவள் விடாமல் புன்னகைத்துக் கொண்டே 'எஸ்' என்றாள்.

"என் பெயர் மங்களேஷ்... இந்தியாவிலிருந்து வருகிறேன். எனக்கு இங்கே அறை ரிசர்வ் ஆகியிருக்கிறது."

அவள் தனக்கு எதிரே இருந்த கம்ப்யூட்டர் சங்கதியிடம் வந்து அதனை இயக்கி மங்களேஷ் சொல்வது உண்மையா என்று சோதித்தாள். அது கம்ப்யூட்டர் திரையில் 'எஸ்' என்று பச்சையாய் ஒளிர்ந்து 'மங்களேஷ்' அண்டு ஜெயவர்த்தன் - ரூம் நெம்பர் 401' என்று எழுத்துக்களை அவசர அவசரமாய் பிரசவித்தது.

ரிசப்ஷனிஸ்ட் தன் சிறிய நெற்றியை அழகாய் சுருக்கிக் கேட்டாள். "இரண்டு பேர்களுக்கு அறை ரிசர்வாகியுள்ளது. நீங்கள் மட்டும் வந்திருக்கிறீர்கள். இன்னொருவர் எங்கே...?"

அவள் இயல்பாய்த்தான் கேட்டாள். ஆனால், மங்களேஷுக்கு கண்ட கண்ட இடத்தில் வியர்த்தது.

"வந்து... வந்து.. அவர் இன்னமும் நான்கைந்து நாட்களில் இங்கே வந்துவிடுவார்."

"அது பெரிய அறை. நீங்கள் மட்டும் தங்கிக் கொள்கிறீர்களா?"

"ஆமாம்..."

"இந்தாங்க சாவி. நான்காவது மாடியில் 401-வது அறை. அறைக்கு நீங்கள் லிஃப்ட்டில் போய்விடுங்கள். லக்கேஜ்கள் வந்து சேர்ந்துவிடும்."

"நன்றி...!"

லிஃப்ட்டை நோக்கிப் போனான். புதைகுழிக்குள் ஜெயவர்த்தன் பத்து விநாடி நேரத்துக்குள் சமாதியான காட்சி மனசுக்குள் அவசர அவசரமாய் துடிக்க - உடம்பு மறுபடியும் வியர்த்தது.



லிஃப்ட் 'ஹா'வென்று திறந்து கிடக்க - உள்ளே நுழைந்து நான்காவது மாடிக்குரிய பட்டனைத் தட்டி விட்டு காத்திருக்க, அது ஒரு விநாடியில் கதவு மூடி ஆறாவது விநாடிக்குள் உயர்ந்து நின்று கதவுகளை விரித்தது.

நான்காவது மாடி.

401-வது அறையைத் தேடிக்கொண்ட போனான்.

வராந்தாவின் கோடியில் - ஒரு நதியின் பரப்பைப் பார்த்த மாதிரி இருந்தது. மாக்னட் கீயை லாக்கர் துவாரத்திற்கு கொடுக்க - கதவு மனஸ்தாபம் காட்டாமல் திறந்தது.

உள்ளே நுழைந்தான்.

அறை பெரிதாய் - ஏறக்குறைய ஒரு சின்ன ஹால் மாதிரி இருந்தது. ரேடியேட்டர் ஒன்று அறையை மிதமான உஷ்ணத்தில் அடைகாக்க - விஸ்தாரமான கட்டிலும் சுவரோடு பொதிந்த வார்ட்ரோப்பும் பார்வைக்குக் கிடைத்தன. வேலைப்பாடு டேபிளின் மேல் வெஸ்ட் ரெக்ஸ் டி.வி.க்ரே நிற திரையோடு அறுபது சேனல்களில் நிகழ்ச்சிகளைப் பிரசவிக்கக் காத்திருந்தது. மங்களேஷ் டி.வி.க்குப் பக்கத்தில் போய் - ஒரு சேனலின் கோர் பட்டனைத் தட்டினான். திரை ஊதா நிறத்துக்குப் பரவி - க்ளோஸப்பில் ஒரு பெண் தன் பல் வரிசையைக் காட்டினாள். ஏதோ பற்பசை விளம்பரம். சேனலை அணைத்து விட்டு கட்டிலில் சாய்ந்தான்.

ஓட்டல் சிப்பந்தி லக்கேஜ்களோடு உள்ளே நுழைந்தான்.

"ஸார்... யுவர் லக்கேஜ்.. ப்ளீஸ் செக்கப்..."

மங்களேஷ் பார்த்துவிட்டு தலையாட்ட - அவன் பின் வாங்கி வெளியேறினான். கதவு தன்னிச்சையாய் ஸ்லோ மோஷனில் நகர்ந்து - சுவர்க்குப் போய் ஒட்டிக்கொண்டு 'க்ளிக்' கென்றது. அறையில் கணப்பு பரவி - குளிர்க்கு இதமாய் இருக்க - மங்களேஷ் கண்களை மூடினான்.

ஜெயவர்த்தன் நினைவுக்குத் தட்டுப்பட்டான். புதைகுழியில் அவன் அவசர அவசரமாய் சமாதியானது மனசுக்குள் பய மாய் வலித்தது. மூளை கலக்கமாய் யோசித்தது.

'நிஷா போட்டு வைத்திருக்கிற திட்டப்படி அந்த நிலவைத் திருட முடியுமா...?'

'ஜெயவர்த்தன் கொலை செய்யப்பட்ட விஷயத்தை நவ மணிக்குத் தெரியாமல்... இந்த ஒரு வார காலத்துக்கு மறைத்து அவன் என்னோடு இருப்பதுபோல் காட்டிக் கொள்வது சாத்தியமா...?'

யோசித்துக்கொண்டிருக்கும்போதே -

தலைமாட்டில் இருந்த ஃபோன் 'முணுமுணு' என்றது. கை நீட்டி ரிஸீவரை எடுத்தான். காதுக்குப் பொருத்தினான்.

''ஹலோ...''

''நான் நிஷா...''

''அட... அதுக்குள்ளே வீடு போய் சேர்ந்துட்டியா...?''

''நோ... நோ... இன்னமும் கார்லதான் போயிட்டிருக்கேன்... இது கார் வயர்லஸ் டெலிஃபோன்...''

''இப்ப... எதுக்கு ஃபோன்..?''

''சும்மாதான்... ரூம் எடுக்கிறதுல எந்தப் பிரச்சனையும் இல்லையே?''

''இல்லை....''

''என்ன பண்ணிட்டிருக்கீங்க...?''

''நாம நினைச்சிட்டிருக்கிறதெல்லாம் நடக்குமான்னு யோசனை பண்ணிட்டிருக்கேன்.''

''ஏன் நடக்காம...? கண்டிப்பா நடக்கும்..''

''நிலா நமக்குக் கிடைக்குமா...''

''கிடைக்கும்! மனசைப் போட்டு அலட்டிக்காமே கொ நேரம் தூங்குங்க. எந்திரிச்சு, குளிச்சு சாப்பிட்டு... என்னை பார்க்க வாங்க... மத்ததைப் பேசிக்கலாம்...'' நிஷா ரிஸீவ வைத்துவிட, மங்களேஷும், ரிஸீவரை வைத்துவிட்டு ப கையில் மல்லாந்தான். கண்களை மூடினான்.

பயணக்களைப்பு உடம்பு பூராவும் முகாம் போட்டி தாலும் கண்களுக்குள் தூக்கம் வர மறுத்தது. ஜெயவர்த்தன மரணம் நெஞ்சை இம்சையாய் பிளந்தது.

'நிஷாவை எந்த அளவுக்கு நம்பலாம்...?'

யோசித்தபடியே மெல்லப் புரண்டு படுத்தவனை டெலிபோ மறுபடியும் முணுமுணுத்துக் கூப்பிட்டது. குப்புறப்படு நிலையிலே ரிஸீவரை எடுத்தான்.

''ஹலோ...''

ஹோட்டல் டெலிஃபோன் ஆபரேட்டரின் குரல் கேட்ட

''திஸ் ஈஸ் ஓவர்சீஸ் கால். கால் ஃப்ரம் மெட்ரா இண்டியா...''

லைன் இணைக்கப்பட்டதும் ''ஹலோ'' என்ற அந் குரலைக் கேட்டு மங்களேஷின் உடம்பு பூராவும் ஒரு கு ஓடியது.

நவமணியின் குரல்.

''ஸ... ஸார்...''

''யாரு... மங்களேஷா...?''

''ஆமா ஸார்...''

''ஏர்போர்ட்டிலிருந்து ஹோட்டலுக்கு இப்பத்தான் வ தீங்களா?''

''ஆமா... ஸார்...''

''சரி... ஜெயவர்த்தன்கிட்ட ரிஸீவரைக் குடு...''

ஒரு விநாடி ஸ்தம்பித்தான் மங்களேஷ். திணறலை சமாளித்துக் கொண்டு பேசினான். ''ஜெயவர்த்தன் பாத்ரூம்ல இருக்கான் ஸார்... இப்பத்தான் உள்ளே போனான். ஏதாவது சொல்லணுமா ஸார்...?''

''ஒண்ணுமில்லை... நான் மறுபடியும் ரெண்டு மணி நேரம் கழிச்சு ஃபோன் பண்றேன்... அங்கே எந்தப் பிரச்சனையும் இல்லையே...?''

''இல்ல ஸார்...''

''பி... கேர்ஃபுல்.. நிலா கைக்கு வர்றது முக்கியமில்லை. அதை மெட்ராஸுக்கு பாதுகாப்பா கொண்டு வர்றதுதான் முக்கியம்...''

''தெரியும் ஸார்... நானும் ஜெயவர்த்தனும் அந்த விஷயத்தில் ரொம்பவும் ஜாக்கிரதையாய் இருப்போம்.''

ரிஸீவரை வைத்துவிட்டு பெருமூச்சு விட்டான் மங்களேஷ். நெஞ்சுக்குள் இப்போது பயத்தின் சதவீதம் அதிகப்பட்டிருந்தது.

## 4

ஃப்ராங்ஃபர்ட்டிலிருந்து ஐம்பது கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தது மாரியன் ப்ளாட்ஸ் என்கிற அந்த இடம். நிறைய காவி கட்டிடங்கள். அவைகளில் கலர் கலராய் ஜன்னல்கள்.



கட்டிடங்களைச் சுற்றிலும் பச்சைநிற பெயிண்டால் மெழுகியது மாதிரி கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் புல்வெளிகள்.

அந்த பழங்கால சர்ச்சுக்குப் பின்னால் இருந்த வெளிறிய சிவப்பு டிஸ்டெம்பர் கட்டிடத்துக்குள் காரை நுழைத்து - ட்யூலிப் மரத்துக்குக் கீழே நிறுத்தினார் ஜான் க்ரிக். சுற்றிலும் அடர்ந்த மரங்களில் பறவைகளின் 'கீச் கீச்' சத்தம்.

ஜான் க்ரிக் இறங்கினார்.

பிங்க் நிற சூட். 'ஜிவ்'வென்ற உயரம். ஐம்பத்தைந்து வயதுக்குரிய தளர்ந்த முகம். மோவாயில் சவரப் பச்சை.

கட்டிடத்தின் வாசற்படிகளில் ஏறி - காலிங் பெல்லுக்கு வேலை கொடுத்தார். கதவு திறந்தது.

நரை தாடிக்குள் பாதி முகத்தை மறைத்து வைத்திருந்த அந்த நபர் கண்களில் மலர்ந்தார்.

''குட்மார்னிங் ஜான் க்ரிக்...''

''குட்மார்னிங் ஹாம்ளர்...''

''உள்ளே வாருங்கள்... உங்களுக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன்.''

ஜான் கிரிக், ஹாம்ளரைத் தொடர்ந்தார்.

''ஹாம்ளர்...! உங்களுடைய அவசர ஃபோன் அழைப்பு எனக்கு ஆச்சர்யத்தைக் கொடுத்தது. நாம் சந்தித்துப் பேசி நீண்ட நாட்களாகி விட்டது இல்லையா...?''

''ம்... கிட்டத்தட்ட இரண்டு மாத காலம் இருக்கும். வெஸ்ட் லிங்கர் செமினாரில் கடைசியாய் பார்த்துப் பேசினோம்...''

பெரிய ஹாலைக் கடந்து மாடிப்படி ஏறினார்கள்.

''இவ்வளவு பெரிய வீட்டில் ஒண்டிக்கட்டையாய் இருந்து கொண்டு, எப்படித்தான் காலம் தள்ளுகிறீர்களோ?''

''பழகிவிட்டது.''

''ஒரு கல்யாணத்தைச் செய்து கொண்டிருந்திருக்கலாம்...''

ஹாம்ளர் சிரித்தார். ''நான் மேற்கொண்டிருக்கிற மெட்டலார்ஜி ஆராய்ச்சிதான் எனக்கு மனைவி, குழந்தைகள் எல்லாமே...''

சோதனைச் சாலையின் கண்ணாடிக் கதவு குறுக்கிட்டது. திறந்துகொண்டு உள்ளே போனார்கள். மண்டியிருந்த காற்றில் ரசாயன உப்புக்களின் வாசனை. நாசிப் பிரதேசத்துக்குள் 'கர்ர்ர்'ரென்று கார நெடி ஏறியது.

ஜான் க்ரிக் கேட்டார்.

''உங்கள் மெட்டலார்ஜி ஆராய்ச்சிகள் எந்த மட்டில் இருக்கின்றன?''

''ஒரு முக்கியமான கட்டத்தைத் தொட்டிருக்கிறது. அதைப் பற்றிப் பேசத்தான் என் பால்ய காலத்து நண்பரான உங்களை அழைக்கிறேன்...''

''முக்கியமான கட்டமா...?''

''ஆமாம்.''

மறுபடியும் ஒரு கதவு குறுக்கிட அதைத் திறந்து கொண்டு உள்ளே போனார் ஹாம்ளர். உள்ளே ரசாயன நெடி இல்லை.

''உட்காருங்கள் ஜான் கிரிக்....''

சோபாவில் புதையப்புதைய உட்கார்ந்தார்கள். எதிர் சோபாவில் ஹாம்ளர் சாய்ந்துகொண்டு தன் சில்வர் நிற தாடியைக் கோதிக்கொண்டே கேட்டார்.

''ஜான் கிரிக்...! உங்களுடைய தங்க மார்கெட் இப்போது எப்படியிருக்கிறது?''



''அவ்வளவு சரியில்லை...''

''சரியில்லையென்றால்...?''

''தங்க போக்குவரத்து வெகுவாய் குறைந்துவிட்டது. விமான நிலையங்களில் எக்கச்சக்க கெடுபிடி. கஸ்டம்ஸ் அதிகாரிகளைச் சரிக்கட்ட ஏராளமான பணத்தைச் செலவழிக்க வேண்டியுள்ளது.. தொழிலை இரண்டு மாதமாக முடக்கி வைத்துள்ளேன்...''

ஹாம்ளர் புன்னகைத்தார். தன் மேஜை டிராயரைத் திறந்து, இரண்டு அங்குல நீளத்தில் - சுண்டு விரல் பருமனில் இருந்த, ஒரு சிறிய தங்கக் கட்டியை எடுத்து ஜான் கிரிக்கிடம் நீட்டினார்.

ஜான் கிரிக் வாங்கிப் பார்த்தார்.

ஹாம்ளர் மேஜையின் மேல் கைகளை ஊன்றிக் கொண்டார். ''ஜான் கிரிக், தங்க வியாபாரத்தில் உங்களுக்கு முப்பது வருஷ கால அனுபவம் இருப்பது எனக்குத் தெரியும். இப்போது நீங்கள் கையில் வைத்திருக்கும் இந்த தங்கத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்...?''

''சுத்தமான 24 காரட் தங்கம்...''

''சந்தேகம் இல்லையே...?''

''ஒரு பர்சண்ட் கூட இல்லை...''

''இப்போது நான் சொல்லப் போகிற உண்மை ஒன்றை நீங்கள் நம்ப மறுக்கலாம்...''

''என்ன உண்மை...?''

''சரியாய் மூன்று மணி நேரத்துக்கு முன்னால் இந்த தங்கத் துண்டு, ஒரு தேனிரும்புத் துண்டாய் இருந்தது என்கிற உண்மைதான்...''

ஜான் கிரிக்கின் விழிகளில் உச்சபட்ச ஆச்சர்யம். ''ஹாம்ளர், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''நம்புவது கடினம்தான்... ஆனால், உண்மை. என் மெட்டலார்ஜி ரிசர்ச் ஒரு முக்கியமான கட்டத்தை தொட்டிருப்பதாய் சற்று முன் சொன்னேனே...அந்த முக்கியமான கட்டம் இதுதான்...! தேனிரும்பைத் தங்கமாய் மாற்றக்கூடிய அற்புதத்தை நிகழ்த்த, எனக்கு இருபது ஆண்டுகள் பிடித்திருக்கிறது...''

ஜான் கிரிக் தன் கையில் வைத்திருந்த தங்கத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துவிட்டு பதட்டப்பட்டார்.

''ஹாம்ளர்... இது எப்படி... சாத்தியம்...?''

''சொல்கிறேன். அதற்கு முன்னால் ஒரு சிறிய ஒப்பந்தம்...''

''என்ன...? சொல்லுங்கள்...''

''உங்களுடைய தங்க மார்க்கெட் வியாபாரத்தில் என்னையும் ஒரு பார்ட்னராக இணைத்துக் கொள்ள வேண்டும். பிறகு இந்தச் சோதனைச்சாலை தங்கம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாக மாறும். தேனிரும்புத் துண்டுகள் தங்கமாக மாற - அதை மார்க்கெட் செய்து, டாலர்களைச் சம்பாதித்து அதில் பாதியை எனக்குத் தர வேண்டும். இந்த ஒப்பந்தத்தை ஒப்புக் கொண்டால் மட்டுமே, மேற்கொண்டு நீங்களும் நானும் பேச முடியும்...''

ஜான் கிரிக் எழுந்து ஹாம்ளரின் கைகளைப் பற்றிக் கொண்டார். ''இது எனக்கு கிடைத்திருக்கிற அதிர்ஷ்டம். உங்கள் ஒப்பந்தத்திற்கு நான் ஒப்புக் கொள்கிறேன்...''

''வாருங்கள் என்னோடு...''

ஹாம்ளர் உள்ளே இருந்த மிகச் சிறிய அறை ஒன்றுக்கு ஜான் கிரிக்கைக் கூட்டிக் கொண்டு போனார். அறையின் அலமாரிகளில் பெரிய பெரிய கண்ணாடி ஜார்கள். அவைகளுக்குள் அசையாமல் நின்றிருக்கும் அமிலங்கள், அடைபட்ட உப்பு சமாச்சாரங்கள், கரைசல்கள்.



நடந்து கொண்டிருந்த ஹாம்ளர் அந்தக் கண்ணாடி ஜாடிக்
பக்கத்தில் வந்ததும் நின்றார். ஜாடிக்குள் பழுப்பு நிறம
உள்ளங்கை பரப்பளவுக்கு ஒழுங்கில்லாத ஒரு பாறைக்க
உட்கார்ந்திருந்தது.

''ஜான் கிரிக்...''

''ம்...''

''இந்த ஜாடிக்குள் இருப்பது என்னவென்று உங்கள
சொல்ல முடியுமா...?''

''ஏதோ... பாறைப் படிவம் மாதிரி தெரிகிறது...''

''இது பாறைப் படிவம்தான்... ஆனால் நம் பூமியின் பாற
படிவம் கிடையாது...''

''பின்னே...?''

''நிலவில் இருந்து கொண்டு வந்த பாறைப் படிவம்...''

''ஈஸிட்...?'' புருவங்களை மேலேற்றி ஆச்சர்யப்பட்டவ
அந்தப் பாறை படிவத்தை மரியாதைப் பார்வை பார்த்தா

''இது உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?''

''எப்படிக் கிடைத்திருக்கும் என்று நினைக்கிறீர்கள்?''

ஜான் கிரிக் தன் வரிவரியான நெற்றியைத் தடவி
கொண்டே - யோசித்துவிட்டு தலையாட்டினார். ''என்னா
ஊகம் செய்ய முடியவில்லை...''

ஹாம்ளர் புன்னகைத்தார். ''மறந்துவிட்டீர்கள் என்
நினைக்கிறேன். 1970-ஆம் ஆண்டு அமெரிக்கா நான்காவ
தடவையாய் - மூன்று ஆட்களை சந்திரனுக்கு அனுப்பினார்கள்
அதில் ஒருவன் என்னுடைய நண்பன் தாம்ஸன். உங்களுக்கு
கூட ஒரு விழாவில் அறிமுகப்படுத்தியிருக்கிறேன்....''

தலையாட்டினார் ஜான் கிரிக்.

''ஆமாம்... ஞாபகம் வருகிறது...''

''நிலவுக்குச் சென்று வந்த தாம்ஸனுக்கு அமெரிக்க அரசாங்கம் விருது அளித்து, பெருமைப்படுத்தியதோடு அல்லாமல் - நிலவிலிருந்து கொண்டுவந்த பாறைப் படிவங்களில் ஒன்றைப் பரிசாகவும் கொடுத்தார்கள். மெட்டலார்ஜி ஆராய்ச்சியில் அப்போது தீவிரமாய் இருந்த நான், அந்த நிலவுப் பாறைப் படிவத்தை ஆராய்ந்து பார்க்க ஆசைப்பட்டு ஒரு வார காலத்திற்குக் கொண்டு வந்து கொடுக்கும்படி சொன்னேன். அவனும் கொடுத்தான். கொடுத்த மூன்றாவது நாளே ஒரு கார் விபத்தில் தாம்ஸன் இறந்து போனான். என்னிடம் அந்த நிலவுப் பாறையைக் கொடுத்தது தாம்ஸனின் மனைவிக்குத் தெரியாததால் அதை நானே வைத்துக் கொண்டேன். கணவன் இறந்த சோகத்தில் நோய்வாய்ப்பட்ட அவளும் சில நாட்களில் இறந்து போனாள். அதற்குப் பிறகு, சந்திரனிலிருந்து கொண்டு வரப்பட்ட இந்தப் பாறையின் துகள்களை என்னுடைய ஆராய்ச்சிக்கு உட்படுத்தியபோது, அதில் அபூர்வமான மூலகங்கள் இருப்பதைக் கண்டுபிடிக்க முடிந்தது. அந்த மூலகங்களை உபயோகப்படுத்தி உலோகத்துறையில் ஏதாவது சாதிக்க நினைத்தேன்... அதனோட வெற்றிதான் ஒரு தேனிரும்புத் துண்டை தங்கமாக மாற்றக்கூடிய அற்புதம்...''

''ப்ராக்டிகலாய்... அதை எனக்கு செய்து காட்ட முடியுமா?''

''மன்னிக்க வேண்டும் ஜான் கிரிக். அந்த ரகசியம் என்னோடு இருக்கட்டும். நிலவுப் பாறைப் படிவில் இருக்கும் அபூர்வ மூலகங்களோடு நான் சில ரசாயன சங்கதிகளைக் கலக்கினேன். அந்தக் கலவையில் தேனிரும்புத் துண்டை, மூன்று மணி நேரம் மூழ்க வைத்து தங்கமாக மாற்றுகிறேன். அந்த அடிப்படை உண்மை மட்டும் உங்களுக்குத் தெரிந்தால் போதுமானது...''



ஜான் கிரிக் தலையாட்டினார்.

''நீங்கள் சொல்வது சரிதான் ஹாம்ளர். உழைப்பு உங்களுடையதாகவே இருக்கட்டும். அதில் என்னுடைய குறுக்கீடு எதுவும் இருக்காது...''

ஹாம்ளர் புன்னகைத்தார். ''இந்த தங்க வியாபாரத்தைத் தொடங்குவதற்கு முன்னால், நீங்களும் நானும் சேர்ந்து ஒரு காரியம் பண்ண வேண்டியிருக்கிறது...''

''என்ன காரியம்...?''

''சட்டத்துக்குப் பிடிக்காத காரியம்...''

''சொல்லுங்கள்...''

''ஒரு கொலையைச் செய்ய வேண்டும்...''

''யாரை...?''

''இந்த ஆராய்ச்சியைப் பற்றின எல்லா உண்மைகளையும் தெரிந்து வைத்திருக்கிற ஒரு பெண்ணை...''

''பெண்...?''

''ஆமாம்...''

''யாரவள்...?''

''என்னிடம் அஸிஸ்டெண்ட்டாகப் பணிபுரியும் நிஷா.''

## 5

மங்களேஷ் குளித்து முடித்து ஸாண்ட்விச்சையும், ஹாம்பர்களையும் மென்று கஷ்டப்பட்டு காலை நேர டிபனாக வயிற்றுக்குள் இறக்கினான். பேப்பர் கோப்பையில் இருந்த

புளிக்காத தயிரைக் குடித்து பசியை மழுங்கடித்தபின் ஹோட்டலைவிட்டு வெளியே வந்தான். அகலமான பிளாட்பாரத்தில் நடந்தான். பதினோரு மணி சூரியன் சுடவில்லை. காலையில் போக்குவரத்து சொற்பமாய்த் தெரிய, ஒரு டாக்ஸியினை நிறுத்தி ஏறிக் கொண்டான். நிஷாவின் அட்ரஸைச் சொல்லிவிட்டு சாய்ந்து உட்கார்ந்தான்.

டாக்ஸி வேகம் எடுத்தது. குளிர், எலும்பு மண்டலத்தை ஊசிகளால் குத்தியதுபோல் தாக்க - கண்ணாடிகளை இறக்கிவிட்டான்.

இருபது கிலோ மீட்டர் தூரத்தில் மூன்று ஊர்கள் கடந்தது. கொஸ்தேக், டொஸார், க்ரிம்ப்லாஸ் எல்லா ஊர்களிலும் கண்ணாடிக் கட்டிடங்கள். மங்களேஷ் ஊரின் சுத்தத்தை நினைத்து ஆச்சர்யப்பட்டுக் கொண்டு இருக்கும்போதே - டாக்ஸி நின்றது. ட்ரைவர் திரும்பி மோசமான ஆங்கிலம் பேசினான்.

''நீங்கள் சொன்ன இடம் இதுதான். ஆனால், குறிப்பிட்ட விலாசத்துக்குப் போக வேண்டுமென்றால் இந்த சதுக்கத்தைக் கடக்க வேண்டும்.''

''நன்றி!''

இறங்கிக் கொண்டே மங்களேஷ் கேட்டான்.

''சார்ஜ் எவ்வளவு?''

''இருநூறு மார்க்ஸ்...''

இந்திய ரூபாய் மதிப்பில் இது எவ்வளவு?'' கணக்குப் போட்ட மங்களேஷுக்கு மூச்சை அடைத்தது. 'ஆயிரத்து அறுநூறு ரூபாய்!'

''கொள்ளை'' என்றான் தமிழில்.

''என்ன சொன்னீர்கள்...?''



''ஒன்றுமில்லை.'' அவன் கேட்ட இருநூறு மார்க்ஸைக் கொடுத்துவிட்டு, குறுகலான சந்தைக் கடந்து - அந்த சதுக்கத்திற்கு வந்தான். பாதாள எஸ்கலேட்டரில் நின்று, மறுபக்கம் தொட்டு இடது பக்கம் பார்த்த போது - நிஷா குடியிருக்கும் தெருவின் பெயர் பளிச்சென்று ஒரு போர்டில் தெரிந்தது.

போனான்.

தெருவில் ஏகப்பட்ட கடைகள். கடைகளில் இருந்த பொருள்கள் மங்களேஷுக்கு அந்நியமாய் இருந்தன. கோக்கோ கோலா டின்களை கையில் வைத்து, சப்பிச் சிரித்தபடி ஆங்காங்கே ஜனக்கூட்டம். பெண்கள் துணிச்சலாய் உடை உடுத்தி - வெளியே காட்டக்கூடாத அவயங்களைக் கட்டாயமாய்க் காட்டினார்கள். மங்களேஷ் அதிசுத்தமான ப்ளாட்பாரத்தில் நடந்து அடுத்த ஐந்து நிமிட நேரத்திற்குள் நிஷாவின் வீட்டு எண்ணைக் கண்டுபிடித்து - காலிங்பெல் குமிழைத் தொட்டான்.

உள்ளே விசிலடித்தது.

அந்த நிமிஷமே கதவும் திறந்தது.

நிஷா அரை நிக்கரோடும் - மெலிசான பனியனிலும் கிடைத்தாள். சிரித்தாள். ''நீங்க பத்து நிமிஷம் லேட்...''

''டாக்ஸிக்காரன் அந்த ரோட்டு கார்னரிலேயே இறக்கி விட்டுட்டுப் போயிட்டான்.'' மங்களேஷ் உள்ளே வந்ததும் அவள் கதவைச் சாத்தித் தாழிட்டாள்.

சிறிய வீடு. நிறைய சௌகரியங்கள். வீட்டுக்கு வேண்டிய அத்யாவசியப் பொருட்கள் இருக்க வேண்டிய இடத்தில் இருந்தன. குளிர் இப்போது மங்களேஷைத் தாக்கவில்லை. காரணம், வீட்டுக்குள் இருந்த கணப்பு.

''உட்காருங்க...''

அவன் உட்கார்ந்ததும் - நிஷாவும் பக்கத்திலேயே உட்கார்ந்தாள். "என்ன, முகத்துல சுரத்தையே காணோம்...?"

"கொஞ்ச நேரத்துக்கு முந்தி நவமணி மெட்ராஸிலிருந்து ஃபோன் பண்ணியிருந்தார்."

"சரி..."

"ஜெயவர்த்தன்கிட்டே ரிஸீவரைக் குடு... பேசணும்னு சொன்னார்."

"அடேடே... அப்புறம்...?"

"அப்புறமென்ன...? ஆள் பாத்ரூம்ல இருக்கார்னு சொல்லிச் சமாளிச்சேன்..."

"குட்..."

"என்ன குட்...? மறுபடியும் ரெண்டு மணி நேரம் கழிச்சு ஃபோன் பண்றேன். ஜெயவர்த்தன்கூடப் பேசணும்னு சொன்னார்."

"இதுக்குப் போயா கவலைப்படறீங்க...?"

"கவலைப்படாமே இருக்க முடியுமா...? நான் ஜெயவர்த்தனுக்கு எங்கே போவேன்...?"

"என்கிட்டே வரலாமே...?"

"நிஷா நீ என்ன சொல்றே...?"

"ஜெயவர்த்தன் நவமணியோட பேசணும் அவ்வளவு தானே...?"

"ஆமா..."

"பேசுவான்..."

"எப்படி?"

"டாக்ஸி ட்ரைவரா வந்தப்ப, நான் பேசிய ஆண் குரல் எப்படி?"



"தத்ரூபம்..."

"என்னால ஒருத்தரோட குரலை அது ஆணாய் இருந்தாலும் சரி, பெண்ணாய் இருந்தாலும் சரி... உடனே இமிடேட் பண்ணிக் காட்ட முடியும்..."

"ஜெயவர்த்தன் மாதிரி உன்னால பேச முடியுமா...?"

"முடியும். என்னால மட்டுமில்லை. உங்களாலும் பேச முடியும்..."

"எப்படி...?"

நிஷா சுவரின் கண்ணாடி ஷெல்ஃபை 'ஜ்ஜர்ர்'ரென்று தள்ளிவிட்டு, உள்ளேயிருந்து பட்டன் மாதிரியான ஒரு சிறிய பொருளை எடுத்தாள்.

"இந்த மாதிரியான ஒரு பொருளை எப்பவாவது பார்த்திருக்கீங்களா?"

மங்களேஷ் வாங்கிப் பார்த்துவிட்டு 'இல்லை'யென்று தலையாட்டினான். நிஷா தொடர்ந்தாள். "இது ஜெர்மானியர்களின் சமீபத்திய கண்டுபிடிப்பு. இந்தச் சிறிய கருவிக்குப் பேர் 'வாய்ஸ் டெஸிபல் ரெய்ஸர்.' இது ஒரு சட்ட விரோதமான கருவி. வெளி மார்க்கெட்டில் கிடைக்காது. விலை ஆயிரம் மார்க்குகள்."

"இதை எப்படி உபயோகப்படுத்துவது...?"

"உபயோகப்படுத்த பழக்கம் வேணும். வாய்ஸ் டெஸிபலைப் பத்தின தியரிடிகல் அறிவு, வேணும்..."

சொன்னவள் ஊசி மாதிரியான ஒரு சங்கதியை எடுத்து அந்த பட்டனைத் திறந்தாள். மங்களேஷிடம் காட்டினாள்.

"உள்ளே ஏதாவது தெரியுதா?"

"ஏதோ க்ரே கலர்ல புள்ளி புள்ளியா தெரியுது..."

''அந்த ஷெல்ஃபில் இருக்கிற ஹேண்ட் லென்ஸை எடுத்து அது வழியா அந்த க்ரே புள்ளிகளைப் பாருங்க...''

மங்களேஷ் லென்ஸ் வழியாய் அந்த க்ரே புள்ளிகளைப் பார்த்தான்; பிரமித்தான். ஒவ்வொரு க்ரே புள்ளியும் ஒரு குட்டி மெஷின் - பரபரவென்று இயங்கிக் கொண்டிருந்தன.

''ஒரு சின்ன கடிகாரம் மாதிரி இருக்கு...''

''ஏறக்குறைய அது மாதிரிதான். இந்த டெஸிபல் ரெய்ஸரை நாக்குக்குக்கீழே மறைவா ஒதுக்கிட்டு இந்த கண்ட்ரோலரை கையில வெச்சுக்கணும்...''

தீப்பெட்டி சைசில் இருந்த கண்ட்ரோலரை எடுத்துக் காட்டினாள். ''ஆண் குரல்ல பேசணும்னா இந்த பட்டனைத் தொட்டா போதும்.... பெண் குரல்னா இந்த பட்டன். இந்தக் கருவி வெச்சிருக்கிறவங்களெல்லாம்.. இன்னொருத்தர் மாதிரி உடனே பேசிட முடியாது. டெஸிபலை மாத்தி மாத்தி... பேசி வால்யூமைக் கண்டுபிடிச்சு - கண்ட்ரோலர்ல ரெஜிஸ்டர் பண்ணிடனும். ஜெயவர்த்தனோட வாய்ஸையும், உங்க வாய்ஸையும் - இந்தக் கண்ட்ரோலர்ல ரெஜிஸ்டர் பண்ணியிருக்கேன். அதை செட் பண்ணிட்டு - ரெய்ஸரை நாக்குக்குக் கீழே வெச்சுக்கிட்டு பேசலாம்....''

''எங்கே பேசு பார்க்கலாம்...''

நிஷா ரெய்ஸரை நாக்குக்கு அடியில் திணித்துக் கொண்டு, கண்ட்ரோலரில் சில பட்டன்களைத் தட்டிவிட்டுப் பேசினாள்.

''என்ன மங்களேஷ்... சௌக்கியமா இருக்கியா..?''

அச்சாய் அப்படியே ஜெயவர்த்தன் குரல்.

''நிஷா...! நீ கில்லாடி...''

''இல்லேன்னா இந்த அந்நிய தேசத்துல வந்து ஒண்டிக் கட்டையா குப்பை கொட்ட முடியுமா...?''



''சரி, ஃபோன் பண்ணு...''

''யாருக்கு...?''

''மெட்ராஸ்ல இருக்கிற நவமணிக்கு...''

''ஜெயவர்த்தன் மாதிரி பேசணும். அவ்வளவுதானே...?''

''ஆமா...! ரெண்டு மணி நேரம் கழிச்சு அந்த ஆள் ஃபோன் பண்றதுக்குள்ளே நீயே ஃபோன் பண்ணிப் பேசிடு.''

''வாங்க பேசிடலாம்.''

பக்கத்து அறைக்குப் போனார்கள். அங்கிருந்த டெலிபோனில் சென்னையைத் தொடர்பு கொண்டனர். நவமணி லைனில் கிடைத்தார்.

நிஷா டெசிபல் ரெய்ஸரின் உதவியால் - ஜெயவர்த்தனைப் போல் பேசினாள். ''ஸார்... நான் ஜெயவர்த்தன். நிஷா வீட்டி லிருந்து பேசிட்டிருக்கேன்... ரெண்டு மணி நேரம் கழிச்சு ஃபோன் பண்றதாய் மங்களேஷ்கிட்ட சொன்னீங்களாம்... ஆனா, நாங்க ஹோட்டலுக்குத் திரும்ப சாயந்திரமாயிடும். அதான் நிஷா வீட்டிலிருந்து ஃபோன் பண்றேன். ஏதாவது என்கிட்ட சொல்லணுமா ஸார்...?''

''இல்ல... ஏற்கனவே சொன்ன விஷயம்தான்...! நிஷாவைப் பார்த்துப் பேசிட்டீங்களா...?''

''பேசிட்டோம்...''

''என்ன சொல்றா...?''

''ரெண்டு நாள்ல நிலா கைக்கு வந்துரும்ன்னு சொல்றா...''

''எந்தப் பிரச்சனையும் இருக்காதாமே...?''

''இருக்காதுன்னு சொல்றா...''

''மங்களேஷ் எங்கே...?''

''பக்கத்துலதான் இருக்கான்...''

''பேசச் சொல்லு...''

நிஷா ரிஸீவரின் வாயைப் பொத்திக்கொண்டு மங்களேஷை ஏறிட்டாள். ''மனுஷன் உன்னைப் பேசச் சொல்றான்...''

''நம்பமாட்டானே....''

மங்களேஷ் ரிஸீவரை வாங்கி ''ஹலோ...'' என்றான்.

''உன் விளையாட்டுத்தனத்தையெல்லாம் மூட்டை கட்டி வெச்சுட்டு காரியத்துல கண்ணாய் இருக்கணும்...''

''சரி... ஸார்...''

''ஜெயவர்த்தனை விட்டுப் பிரியக்கூடாது... இருபத்தி நாலு மணிநேரமும் அவன் கூடத்தான் இருக்கணும்...''

''சரி ஸார்...''

''ரிஸீவரை நிஷாகிட்டே குடு...''

மங்களேஷ் ரிஸீவரின் வாயைப் பொத்திக்கொண்டு நிஷாவை ஏறிட்டான். ''உன்கூடப் பேசணுமாம்... வாயில் இருக்கிற டெசிபல் ரெய்ஸரை எடுத்துட்டுப் பேசு...''

நிஷா டெசிபல் ரெய்ஸரை உமிழ்ந்துவிட்டு ரிஸீவரை வாங்கிப் பேசினாள். ''ஹலோ... நான் நிஷா...''

''நிஷா... என்னோட ஆட்கள் எப்படி...?''

''வெரி க்ளவர்...''

''நிலவு எப்ப... கைக்கு வரும்...?''

''எப்படியும் ரெண்டு நாட்கள் ஆயிடும்... திட்டத்தை பொறுமையா செயல்படுத்தணும், இல்லேன்னா... கெட்டுடும்...''

''உன்மேலே எனக்கு நம்பிக்கை இருக்கு...''



''அது போதும்...''

''மறுபடியும் நாளைக்கு நீயே ஃபோன் பண்ணு...''

''இதே நேரம் பண்றேன்...''

நிஷா ரிஸீவரை வைத்துவிட்டு - பக்கத்தில் நின்றிருந்த மங்களேஷின் தோள்மேல் சாய்ந்தபடி சிரித்தாள்.

''பாவி மனுஷன் ஏமாறப் போறான்...''

''நிஷா...''

''ம்...''

''எனக்கு ஆச்சர்யமாயிருக்கு..''

''எது...?''

''கடந்த ரெண்டு வருஷகாலமா... ஃப்ராங்ஃபர்ட்டில இருந்துகிட்டே கடத்தல் வேலைகளில் நவமணிக்கு ஒத்தாசை பண்ணிட்டிருந்த. நீ... திடும்னு என்னைக் காதலிக்க ஆரம்பிச்சது...''

நிஷா சிரித்தாள்.

''மறுபடியும் ஆச்சர்யப்பட ஆரம்பிச்சுட்டீங்களா.. இதோ பாருங்க மங்களேஷ்! அன்னிக்கு மெட்ராஸ்ல - உங்ககிட்ட சொன்னதைத்தான் நான் இன்னிக்கும் சொல்றேன். வாழ்க்கையில வசதிகளைப் பெருக்கிக்கணும்ங்கிற ஒரே ஒரு காரணத்துக்காகத்தான் மெட்டலார்ஜிஸ்ட் ஹாம்ளர்கிட்டே அசிஸ்டெண்டா வேலை பார்த்துக்கிட்டே, நவமணியோட கடத்தல் காரியங்களுக்கு உதவி பண்ணினேன். இப்ப எனக்கு வசதியான வாழ்க்கை இருக்கு. இனிமே கடத்தல் காரியங்களை விட்டுடலாம்னு ஒரு எண்ணம் மனசுல முளைச்சப்ப தான் ஹாம்ளர்கிட்டே இருக்கிற நிலவு பத்தின விஷயம் எனக்கு தெரிஞ்சது. நிலவுப் பாறையில் இருக்கிற அபூர்வ

மான மூலகங்கள் தேனிரும்புத் துண்டை தங்கமா மாத்தற அற்புதத்தை எம் மனசுக்கள்ளேயே வெச்சுக்கத் தெரியாம நவமணிகிட்டே வாய் தவறிச் சொன்னதுதான்... நான் பண்ணின முட்டாள்தனம். அதைப்பத்தியும் கவலையில்லை... நிலவுப்பாறை நம்ம கைக்கு வர்றதுக்கான எல்லா ஏற்பாடு களையும் பண்ணிட்டோம். நாம போட்டிருக்கிற திட்டப்படி எல்லாம் நடந்தா நாளைய குபேரர்கள் நாம்தான். ஜெயவர்த்தனை சமாதி பண்ணிட்டோம். அடுத்த குறி ஹாம்ளர்..."

"ஹாம்ளரைப் பார்க்கக் கிளம்பலாமா...?"

"கிளம்பிட்டே இருக்கோம்."

சொன்ன நிஷா பக்கத்தில் இருந்த மேஜை டிராயரைத் திறந்து அந்த ஃபயர் ஃப்ளேம் ரிவால்வரை எடுத்துக் கொண் டாள்.

வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தார்கள்.

## 6

சென்னை. பெசண்ட் நகர் எக்ஸ்டன்ஷன்.

அந்தச் சிறிய வீட்டிற்கு முன்னால் ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு உள்ளே போனான் அருள். (இரண்டாம் அத்தியாயத்தில் பார்த்த அருள்.)

பங்களாவின் பின் பக்கம் இருந்து குரைத்துக் கொண்டு வந்த நாய், அவனைப் பார்வையில் வாங்கியதும் வாலை ஆட்டியது.

அருள் போர்ட்டிகோ படியேறி - காலிங்பெல்லைத் தொடு வதற்கு முன் கதவு திறந்தது.



திறந்த கதவுக்குப் பின்னால் -

சாருமதி நின்றிருந்தாள். (முதல் அத்தியாயத்தில் ஃப்ராங்ஃபர்ட் ஏர்போர்ட்டிலிருந்து ஜெயவர்த்தன் டெலிஃபோன் பண்ணி பேசிய அதே சாருமதி.)

"வா.. அருள்.. என்ன வேர்த்து விறுவிறுத்து வர்றே...?"

"உள்ளே போய்ப் பேசலாம் வா..."

போனார்கள்.

வரவேற்பறை சோபாக்களில், பக்கம் பக்கமாய் உட்கார்ந் தார்கள்.

"சொல்லு... அருள்..."

"வீட்ல யாரும் இல்லையே...?"

"இல்ல... சொல்லு..."

"ஃப்ராங்ஃபர்ட்டிலிருந்து ஜெயவர்த்தன் ஃபோன் பண்ணிப் பேசினானா?"

"ஆமா..."

"எத்தனை மணிக்கு...?"

"ஒரு மூணு மணி நேரத்துக்கு முந்தி..."

"நவமணிக்கு ஜெயவர்த்தன் மேல் சந்தேகம் வந்துடுச்சு."

"எ.. எப்படி...?"

"மங்களேஷ் பக்கத்துல இல்லாத நேரத்துல உனக்கு போன் பண்ணிட்டு, அப்படியே நவமணிக்கும் போன் பண்ணியிருப் பான் போலிருக்குன்னு அந்த மனுஷனுக்கு சந்தேகம் வந்துடுச்சு..."

"உன்கிட்டே என்ன சொன்னார்...?"

"ஜெயவர்த்தன் எனக்கு மட்டும் ஃபோன் பண்ணியிருக்க மாட்டான். என்னைத் தவிர வேற ஒருத்தர்க்கும் ஃபோன் பண்ணத்தான் மங்களேஷை கபேடீரியாவில் விட்டுட்டு அவன் தனியா வந்திருக்கான்னு சொன்னார்...! ஜெயவர்த் தன்கிட்டே ஏதோ தப்பு இருக்கு. அந்தத் தப்பை உடனே கண்டு பிடிச்சாகணும்ன்னு பிடிவாதமா இருக்கார்."

சாருமதியின் முகம் கலக்கத்தில் விழுந்தது. "உனக்கும் எனக்கும் ஜெயவர்த்தனுக்கும் உள்ள நெருக்கம் நவமணிக்கு தெரிஞ்சுடுச்சா..."

"அதெல்லாம் தெரியலை... ஆனா ஜெயவர்த்தனுக்கு யார்கிட்டேயோ காண்டாக்ட் இருக்குங்கிற முடிவுக்கு அவர் வந்துட்டார். என்னை உடனே ஃப்ராங்ஃபர்ட்டுக்கு புறப் பட்டுப் போகச் சொல்லிட்டார்..."

"எதுக்கு...?"

"ஜெயவர்த்தனை அவனுக்குத் தெரியாமே நான் கண்காணிக் கணுமாம். அவன்கிட்டே ஏதாவது தப்பு இருந்தா... உடனே ஃபோன் பண்ணிச் சொல்லணுமாம்..."

சாருமதி தலையில் கை வைத்துக் கொண்டாள்.

"கெட்டது குடி..."

"நாளைக்குக் காலையில ஃப்ராங்ஃபர்ட்டுக்கு ஃப்ளைட் இருக்கு. நான் கிளம்பறேன்... அங்கே ஜெயவர்த்தனும் நானும் சேர்ந்து மங்களேஷைத் தீர்த்துக் கட்டிட்டு, நிஷா மூலமா நிலவு கைக்கு வந்ததும் - அவளையும் முடிச்சுட்டு உனக்குத் தகவல் தர்றோம்.... ஃப்ராங்ஃபர்ட்ல நான் தங்கப் போற ஹோட்டல் பேரு இண்டர்நேஷனல் லாயிட்ஸ். போன் நெம்பரைப் போனதும் தெரியப்படுத்தறேன்..."

"நாளைக்குக் காலையில எத்தனை மணிக்கு ப்ளைட்...?"



"ஆறு மணிக்கு..."

"நான் ஏர்போர்ட் வரட்டுமா?"

"வேண்டாம்...."

"ஒரு விஷயம் ஞாபகம் இருக்கட்டும் அருள்..."

"என்ன...?"

"நிலவுப் பாறை மூலகங்களோடு சேர்ந்து தேனிரும்புத் துண்டு தங்கமா மாறுகிற சூட்சும ஃபார்முலாவை - நிஷா கிட்டேயிருந்து தெரிஞ்சுக்கிறதுக்கு முன்னாடி அவளைக் கொன்னுடாதீங்க..."

"எங்களுக்குத் தெரியாதா என்ன...?"

அருள் எழுந்தான்.

# 7

**ஹா**ம்ளர் சொன்னதைக் கேட்டு ஜான் கிரிக் கண்களில் அதிர்ச்சியைக் காட்டினார். குரலில் லேசாய் நடுக்கம்.

"ஹாம்ளர்! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்... நிஷாவைக் கொலை செய்யத்தான் வேண்டுமா...?"

"ஆமாம்..."

"அவளையும் நம் வியாபாரத்தில் இணைத்துக் கொண்டால் போயிற்று..."

"வேண்டாம்... அவள் அவ்வளவு நல்ல பெண் இல்லை..."

"நல்ல பெண் இல்லை என்று தெரிந்தும் எதற்காக அவளை உங்கள் அஸிஸ்டெண்ட்டாக வைத்திருக்கிறீர்கள்...?"

"வேலைக்குச் சேர்ந்தபோது அவள் நல்லவளாகத்தான் இருந்தாள். வேலைக்கு இருந்த இத்தனை வருஷமும் அவளைப் பற்றித் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டாமல் இருந்துவிட்டேன்... கடந்த பத்து நாட்களுக்கு முன்புதான்... அவளைப் பற்றித் தெரிந்து கொள்ள முடிந்தது..."

"எப்படித் தெரிந்து கொண்டீர்கள்...?"

"அவள் தன் கைப்பையில் வைத்திருந்த ஒரு கடிதத்தை பத்து நாட்களுக்கு முன் எதேச்சையாய் படிக்க நேர்ந்தது. கடித வார்த்தைகள் எதுவுமே புரியவில்லை. எல்லாமே சங்கேத வார்த்தைகள். ஒரு நல்ல பெண்ணுக்கு வரக்கூடிய கடிதம் மாதிரி அது என் மனதுக்குப்படவில்லை..."

ஜான் கிரிக் புன்னகைத்தார். "நிஷாவின் மேல் உங்களுக்குச் சந்தேகம் வந்துவிட்ட பிறகு அவள் உயிரோடு இருப்பது சரி யில்லை... ஏதாவது ஒரு சாலை விபத்தில் அவளை முடித்து விடுவது மிகச் சுலபம்..."

"நிஷா இந்தியாவைச் சேர்ந்தவள். ஒரு இந்தியப் பெண் ணுக்கும் ஜெர்மானியனுக்கும் கள்ள உறவில் பிறந்தவள். அவளைப் பெற்றவர்கள் இப்போது உயிரோடு இல்லை."

"அப்படியென்றால் அவள் ஒண்டிக்கட்டை?"

"ஆமாம்..."

"தீர்த்துக் கட்டுவது சுலபம்..."

"போலீஸ் சந்தேகப்படாதபடி ஒரு கொலையைச் செய்வது அவ்வளவு சுலபமான விஷயம் இல்லை...."

"இங்கே... நிஷாவுக்கு வேலை நேரம் எப்போது?"



"மதியம் ஒரு மணியிலிருந்து இரவு எட்டு மணி வரை..."

"இங்கேயே வைத்து அவளைத் தீர்க்க முடியாதா...?"

"இங்கே வேண்டாம்... அவளை ஏதாவது ஒரு சாலை விபத்தில் சாகடிப்பது நல்லது..."

வாசலில் காலிங் பெல் சத்தம் கேட்டது.

ஹாம்ளர் தன் மணிக்கட்டிலிருந்த கடிகாரத்தைப் பார்த்து விட்டு யோசனையாய் நெற்றியைத் தேய்த்தார். "இந்நேரத் துக்கு யார் என்று தெரியவில்லையே...?"

"போய் பார்த்துவிட்டு வாருங்கள்... நான் இங்கேயே இருக்கிறேன்..." ஜான் கிரிக் சொல்ல, ஹாம்ளர் கீழே இறங்கி வாசல் கதவை நோக்கிப் போனார்.

திறந்தார்.

வெளியே -

வாசல்படிகளில் - நிஷாவும் மங்களேஷும் புன்னகை களோடு நின்றிருந்தார்கள்.

மலர்ந்தார்.

"நிஷாவா...? என்ன இன்றைக்கு இவ்வளவு சீக்கிரத்தில் வேலைக்கு வந்துவிட்டாய்...?"

"வேலைக்கு வரவில்லை ஸார்..."

"பின்னே..."

"இவர் உங்களைப் பார்க்க வேண்டும் என்று சொன்னார். கூட்டிக் கொண்டு வந்தேன்..."

"யார் இவர்...?"

"இவர் மிஸ்டர் மங்களேஷ்... இந்தியாவிலிருந்து வந்திருக் கிறார்..." இருவரும் கை குலுக்கினார்கள்.

"உள்ளே வாருங்கள்..."

நுழைந்தார்கள். ஹாம்ளர் கதவைச் சாத்தும்பொழுது நிஷா கேட்டாள். "வெளியே வாசல் போர்ட்டிகோவில் கார் ஒன்று நிற்கிறதே. அது யாருடைய கார்...?"

"என்னுடைய நண்பன் ஜான் கிரிக் கார் அது...!"

"இப்போது... லேப்பில் இருக்கிறாரா...?"

"ஆமாம்..! நிஷா, மிஸ்டர் மங்களேஷோடு நீ பேசிக் கொண்டிரு. இரண்டு நிமிடத்தில் வந்துவிடுகிறேன்..."

சொன்ன ஹாம்ளர் மாடிப்படிகள் ஏறி மேலே போனார். நாற்காலியில் உட்கார்ந்து மெட்டலார்ஜி சம்பந்தப்பட்ட புத்தகம் ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்த ஜான் கிரிக் நிமிர்ந்தார். "யார் வந்திருக்கிறார்கள் ஹாம்ளர்...?"

"நிஷாவும் அவர்களுக்கு வேண்டிய ஒருத்தனும்..."

ஜான் கிரிக் ஆச்சர்யப்பட்டார்.

"எதற்காக வந்திருக்கிறார்கள்...?"

"தெரியவில்லை..."

"அவளோடு வந்திருக்கிறவன் யார்...?"

"தெரியவில்லை. இனிமேல் போய்த்தான் விசாரிக்க வேண்டும். நீங்களும் என்னோடு வாருங்கள் ஜான் கிரிக். நிஷாவோடு பேசிப் பாருங்கள். அப்போதுதான் அவளைப் பத்தின ஒரு கணிப்புக்கு வரமுடியும்..."

"வாருங்கள் போகலாம்..."

திரும்பி நடக்க முயன்றவர்கள் திகைத்தார்கள்.

கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு ரிவால்வர்களோடு உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்கள் நிஷாவும் மங்களேஷும்.



## 8

ஹாம்ளரும் ஜான் கிரிக்கும் அச்சத்தில் உறைந்து போனார்கள். மங்களேஷ் கையிலிருந்த ரிவால்வரை அசைத்த படி சொன்னான்.

"போத் ஆஃப் யூ... ரெய்ஸ் யுவர் ஹேண்ட்ஸ்..."

உடனே கீழ்ப்படிந்து கைகளை உயர்த்தினார்கள்.

ஹாம்ளரின் குரல் பிசிறியது.

"நிஷா...! என்ன இதெல்லாம்...?"

"எதுவும் பேசக்கூடாது.. அப்படி சுவரோரமாய் இருக்கும் நாற்காலியில் போய் உட்காருங்கள். ஆனால், தூக்கிய கைகளைத் தாழ்த்தக்கூடாது."

போய் உட்கார்ந்தார்கள்.

நிஷா தொடர்ந்தாள்: "இப்படியே உட்கார்ந்திருக்க வேண்டும். எந்தக் காரணத்துக்காகவும் அசையக்கூடாது."

ஹாம்ளர் கத்தினார்.

"நிஷா! உனக்கு என்ன வேண்டும்...?"

சிரித்தாள்.

"நிலா...! நீங்கள் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் நிலாவின் பாறைத்துணுக்கு வேண்டும்." சொன்னவள் திரும்பினாள். "மங்களேஷ்...இந்த ரெண்டு கிழடையும் நாம கொண்டு வந்திருக்கிற கயித்தால கட்டிப் போடுங்க..."

நிமிஷ நேரத்தில் பரபரவென்று கட்டிப்போட்டான். ப்ளாஸ்டரையும் வாயில் ஒட்டினான்.

"வாங்க... உள்ளே போகலாம்..."

மங்களேஷைக் கூட்டிக் கொண்டு பக்கத்து அறைக்குள் நுழைந்தாள். சுவர் அலமாரிகளை கண்ணாடிகள் அடைகாத்துக் கொண்டிருக்க - உள்ளே ராட்சஸ ஜார்களில் ரசாயனச் சங்கதிகள்.

"நிலா எங்கே... நிஷா...?" - மங்களேஷ் ஆர்வமாய் பார்வையைத் துரத்தினான்.

"இந்தப் பக்கமா வாங்க..."

கூட்டிக் கொண்டு போய் அந்தக் கண்ணாடி ஜாடிக்குப் பக்கத்தில் நின்றாள். "இதான்..."

மங்களேஷ் பிரமிப்பாய் பார்த்தாள்.

"சாதாரண பாறைக்கட்டி மாதிரிதான் இருக்கு..."

"இதுவா பாறைக்கட்டி...? ஒரு தங்கச்சுரங்கத்தையே உண்டாக்கப் போகிற மந்திரக்கோல்..."

"எடுத்துக்கலாமா...?"

"ம்... எடுத்து அந்தப் பால்யூர்தீன் பாக்ஸுக்குள்ளே போட்டுக்குங்க..."

மங்களேஷ் ஜாடியின் மூடியைத் திறந்து.. நிலாவின் அந்தப் பாறைக் கட்டியை எடுத்தான். ஒழுங்கில்லாத வடிவம். ஈயக் குண்டு மாதிரி கனம். பரவசமாய் விரல்களால் தடவினான்.

"நம்பவே முடியலை நிஷா..."

"எதை..?"

"இந்த நிலா இவ்வளவு சீக்கிரம் நம்ம கைக்கு வரும்ன்னு."



"வீட்டுக்குப் போய் சாவகாசமாய் ஆச்சர்யப்படலாம். அந்த ரெண்டு கிழடையும் தீர்த்துக் கட்டிட்டு உடனே புறப்பட்டாகணும்..."

அறையை விட்டு வெளியே வந்தார்கள். வாய்களில் ஒட்டப்பட்ட பிளாஸ்திரிகளோடும் கண்களில் மிரட்சியோடும் ஹாம்ளரும், ஜான் கிரிக்கும் நாற்காலிகளில் நெளிந்து கொண்டிருந்தார்கள்.

நிஷா அவர்களுக்குப் பக்கத்தில் போனாள். "ஸாரி மிஸ்டர் ஹாம்ளர்! உங்கள் அனுமதியில்லாமல் அந்த நிலா துணுக்கை எடுத்துக் கொண்டு விட்டேன். நீங்கள் பண்ணிய ஆராய்ச்சி போதும். நிரந்தரமாய் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு மட்டும் ஓய்வு கொடுக்கலாம் என்று நினைத்து வந்த இடத்தில் உங்களுடைய நண்பரும் இருந்தது அவ ருடைய பெரிய துரதிர்ஷ்டம். உங்களுக்குத் துணையாக அவரும் வருவார்..."

சொன்னவள் பக்கத்து அலமாரிக்குப் போய் - ஒரு கைப்பிடி பஞ்சு ரோலைப் பிய்த்து 'கோகய்ன்' விஷம் இருந்த பாட்டிலுக்குள் நுழைத்து நனைத்துக் கொண்டாள்.

"மங்களேஷ்! ஹாம்ளரைக் கொஞ்சம் திமிராம பிடிச்சுக்குங்க..."

அவன் பிடித்துக் கொள்ள - 'கோகய்ன்' விஷம் தோய்க்கப்பட்ட பஞ்சை ஹாம்ளரின் நாசித் துவாரங்களுக்குப் பக்கத்தில் கொண்டு போய் சுவாசிக்கச் செய்தாள்.

இருபதே விநாடிகள்!

ஹாம்ளரின் தலை ஒரு பக்கமாய் சாய்ந்தது.

"இனி நம் புது நண்பர்..."

மங்களேஷ், ஜான் கிரிக் தலையை இரண்டு கைகளாலும் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ள - கோகய்ன் பஞ்சு அவ

ருடைய நாசித் துவாரங்களுக்கு முன்பாய் வந்து நின்றது. பதினைந்து விநாடிகள் திமிறிவிட்டு தலையை இடது பக்க மாய் சாய்த்தார்.

நிஷா கையைச் சொடுக்கினாள்.

"இனி அடுத்த கட்டம்...! மங்களேஷ்! ரெண்டு பேரோட கயிற்றுக் கட்டுக்களையும் அவிழ்த்து... தரையில் படுக்க வையுங்க... கயிறும் ப்ளாஸ்டரும் இந்த ஸ்பாட்ல இருக்கக் கூடாது..."

மங்களேஷ் செயல்பட்டான்.

இரண்டே நிமிஷத்தில் ஹாம்ளரும், ஜான் கிரிக்கும் அந்த அறைக்குள் மூலைக்கு ஒருவராய் கிடத்தப்பட்டார்கள்.

நிஷா ஸ்பிரிட் நிரம்பிய ஒரு பெரிய பாட்டிலைக் கொண்டு வந்து ஸ்பிரிட்டால் ஹாம்ளரையும், ஜான் கிரிக்கையும் குளிப் பாட்டிவிட்டு, பாட்டிலை உடைத்தாள். பின் அலமாரியில் இருந்த கன் பவுடர் டப்பாக்களைத் தரையில் பரப்பிவிட்டு - மங்களேஷை ஏறிட்டாள்.

"நிலாவைப் பத்திரமாய் எடுத்துக்கிட்டீங்களா?"

"இதோ..."

கையில் இருந்த பால்யூர்தீன் பாக்ஸைக் காட்டினான்.

"சரி! நீங்க வெளியே போய் நம்ம காரை ஸ்டார்ட் பண்ணி ரெடியா வெச்சிருங்க... நான் நெருப்பைப் பத்த வெச்சுட்டு வந்துடறேன்..."

"ஜாக்கிரதை நிஷா..." - சொன்ன மங்களேஷ் வெளி யேறினான்.

அவன் போனதும் - நிஷா தன் இடுப்பின் மறைவில் வைத், திருந்த ஃபயர் ஃப்ளேம் ரிவால்வரை எடுத்துக் கொண்டாள்.



இருபதடி தூரம் ஜாக்கிரதையாய் தள்ளி நின்று கொண்டு ஸ்பிரிட் சிந்திக் கிடந்த இடத்தைக் குறிபார்த்து ட்ரிக்கரைச் சுண்டினாள்.

ரிவால்வரிலிருந்து பீறிட்டுப் பறந்த நெருப்புக் கங்கு ஸ்பிரிட்டின்மேல் போய் விழ -

அறை முழுக்க உற்சாகத் தீயின் நாக்குகள்.

வெளியே ஓடி வந்தாள் நிஷா. காரை ஸ்டார்ட் செய்து வைத்துக் கொண்டு காத்திருந்த மங்களேஷ் கதவைத் திறந்து விட - உள்ளே பாய்ந்தாள்.

கார் விரைந்தது.

## 9

மதியம் ஒரு மணி அளவில் - மங்களேஷை ஹோட்டலில் விட்டுவிட்டு, மறுபடியும் ஹாம்ளரின் பங்களாவுக்கு அப்பா வித்தனமாய்ப் போனாள் நிஷா.

பங்களா முற்றிலுமாய் எரிந்து கருகிய சுவர்களோடு நின்றிருக்க, இரண்டு தீயணைப்பு வேன்களும், ஒரு போலீஸ் பெட்ரோல் காரும் தெரிந்தது. வேடிக்கை பார்த்துக் கொண்டு சொற்பமாய் ஒரு கும்பல்.

நிஷா காரை நிறுத்திவிட்டு, ஒரு போலியான அதிர்ச்சி யோடு போலீஸ் அதிகாரியை நோக்கி ஓடினாள்.

"ஸ... ஸார்... என்னாயிற்று...? எப்படித் தீப்பிடித்தது?"

அதிகாரி நிமிர்ந்தார். செந்நிற யூனிஃபார்ம். ப்ரேம் இல்லாத மூக்குக் கண்ணாடி கண்களை கச்சிதமாய் கவ்வி

யிருந்தது. க்ரே நிற டை. கண்கள் காப்பர் சல்பேட் நீலத்தில் இருந்தது. நிஷாவைக் கேட்டார்.

"நீ யார்...?"

"என் பெயர் நிஷா. மெட்டலார்ஜிஸ்ட் ஹாம்ளரிடம் உதவியாளராக இருக்கிறேன்..."

"நீ விபத்து நடந்த விபரம் தெரிந்துதான் வந்தாயா?"

'நான் எண்ணியபடியே 'விபத்து' என்று முடிவு கட்டி விட்டார்கள்.' மனசுக்குள் ஒரு விநாடி சந்தோஷத்தைக் கொண் டாடிய நிஷா உடனே அதை அழித்துவிட்டு முகத்தில் பழைய கலவரத்தையே காட்டினாள்.

"இல்லை... இங்கே வந்த பிறகுதான்... தெரிந்தது. என் னுடைய வேலை நேரம் இது...! தினசரி மதியம் ஒரு மணிக்கு வருவேன். எட்டு மணிக்குப் போவேன். ஹாம்ளர் தீ விபத்தில் சிக்கிக் கொண்டு விட்டாரா...? இல்லை. வெளியே போயிருந்த போது விபத்து நடந்ததா?"

அதிகாரி பெருமூச்சு விட்டார்.

"ஹாம்ளர் தீயில் சிக்கி இறந்துவிட்டார். அவரோடு இன் னொரு நபரும் தீயில் கருகிக் கிடக்கிறார். உனக்கு அவரை அடையாளம் தெரிகிறதா என்று பார்க்கலாம் வா."

அதிகாரி அவளைப் 'புகைந்து' கொண்டிருந்த இடர்ப்பாடு களுக்கு மத்தியில் கூட்டிப் போனார். காற்றில் எரிந்த ரசா யனப் பொருட்களின் நெடி இன்னமும் இருந்தது. வெடித்துச் சிதறிய கண்ணாடி ஜாடிகள் பொங்கி வழிந்த அமிலங்கள், எரிந்தும் எரியாத மேஜை.

நாற்காலிகள்.

அதிகாரி நின்றார்.



காஸ்டபிள் நாவல் வெள்ளை விரிப்பை நீக்க -

கைகளும் கால்களும் வளைந்து கருகிப்போன உடல்களோடு ஹாம்ளரும், ஜான் கிரிக்கும் கோரமாய்த் தெரிந்தார்கள்.

நிஷா உடனே கண்களில் நீரைக் காட்டி கர்ச்சீப்பால் வாயைப் பொத்திக் கொண்டாள். அதிகாரி கேட்டார்.

"ஹாம்ளருக்குப் பக்கத்தில் இருக்கிற இந்த நபர் யார் என்று தெரிகிறதா?"

நிஷா பார்த்துவிட்டு தலையாட்டினாள்.

"தெரியவில்லை..."

"இந்த விபத்து எப்படி ஏற்பட்டது என்று தெரியவில்லை... உன்னால் ஏதாவது அனுமானிக்க முடிகிறதா?"

"ஓரளவுக்கு..."

"சொல்..."

"ஹாம்ளர் ஒரு மெட்டலார்ஜிஸ்ட்... சமீப காலமாய் அவர் 'கன் பவுடர்' தயாரிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். அபாயகரமான இந்த ஆராய்ச்சி வேண்டாம் என்று எவ்வளவோ தடவை அவரிடம் சொல்லியிருக்கிறேன். அது தவிர..."

"ம்... சொல்..."

"ஹாம்ளருக்கு கடந்த சில நாட்களாய் அளவுக்கு மீறிய அஜாக்ரதைத்தனம். ஸ்பிரிட் விளக்குக்குப் பக்கத்திலேயே கன் பவுடர் சேம்பிள் பொட்டலங்களையும் வைத்து விடு கிறார். எத்தனையோ தடவை நான் அகற்றியிருக்கிறேன்."

"இப்போது நீ சொன்னதையே ஒரு ஸ்டேட்மெண்டாக எழுதித் தர முடியுமா?"

"தருகிறேன்."

# 10

சென்னை. மறுநாள் இரவு பதினோரு மணி.

ஒரு வாய் விஸ்கிக்கு ஒரு முந்திரிப் பருப்பு வீதம் மென்று கொண்டிருந்த நவமணி, டெலிபோன் ஒலித்ததும் ரிஸீவரை எடுத்தார். குரல் கொடுத்தார்.

''ஹலோ...''

''ஸார்... ஃப்ராங்ஃபர்ட்டிலிருந்து நான் அருள் பேசறேன்.''

''எப்ப போய்ச் சேர்ந்தே...?''

''ஒரு மணி நேரத்துக்கு முந்தி.''

''ஜெயவர்த்தன், மங்களேஷ் இரண்டு பேரையும் கண் காணிக்க ஆரம்பிச்சுட்டியா?''

''இப்பத்தான் கிளம்பிட்டிருக்கேன் ஸார். வந்து சேர்ந்துட்ட விபரத்தைச் சொல்றதுக்காகத்தான்... உங்களுக்கு ஃபோன் பண்ணினேன்.''

''சரி... எந்த ஹோட்டல்ல தங்கியிருக்கே...?''

''இண்டர்நேஷனல் லாயிட்ஸ்...''

''போன் நம்பர் சொல்லு...''

''07174579.''

''மறுபடியும் எப்ப போன் பண்ணுவே?''

''ஜெயவர்த்தனையும் மங்களேஷையும் கண்காணிச்சு விபரம் ஏதாவது தெரிஞ்சதும் போன் பண்றேன் ஸார்...



எப்படியும் ரெண்டு மணி நேரத்துக்குள்ளே என்னோட ஃபோன் காலை நீங்க எதிர்பார்க்கலாம் ஸார்.''

''சரி... அவங்களைக் கண்காணிக்கிறதுல ஜாக்கிரதை இருக்கட்டும். அவங்க பார்வையில நீ பட்டுடக்கூடாது...''

''தெரியும் ஸார்.''

நவமணி ரிஸீவரை வைத்துவிட்டு - விஸ்கி டம்ளரை எடுத்துக் கொண்டார். இரண்டு மடங்கு விழுங்கியிருந்த போது - வாசலில் மோட்டார் பைக் சத்தம் கேட்டது. அரை நிமிஷ நேரம் கழித்து - காலிங் பெல்லின் 'க்க்ரிரிக்' கேட்டது.

நவமணி எழுந்து போய் வ்யூ ஃபைண்டரில் பார்த்தார்.

அவருடைய ஆள் ஆல்பர்ட் சுயிங்கம் மென்றபடி வாசற்படியில் தெரிந்தான். முகத்தில் பதட்டம் பரவியிருந்தது.

கதவைத் திறந்தார்.

''என்ன ஆல்பர்ட்...''

''ஸார்...! ஒரு முக்கியமான விஷயம்...'

''உள்ளே வா.''

வந்தான்.

கதவைச் சாத்திவிட்டு - போதையின் லேசான தள்ளாட்டத்தோடு போய் சோபாவுக்குச் சாய்ந்துகொள்ள ஆல்பர்ட் எதிரில் வந்து பவ்மாய் நின்றான்.

''என்ன சொல்லு...''

ஆல்பர்ட் அவஸ்தையில் எச்சில் விழுங்கிவிட்டு தொடர்ந்தான். ''ஸார், ஒரு மணி நேரத்துக்கு முந்தி தி.நகர் டெலிகிராப் ஆபீஸுக்கு போய் கீழக்கரை சாய்புவுக்கு சரக்கு விஷயமா ஃபோன் பேசறதுக்காக எஸ்.டி.டி. ஸ்லிப்பை எழுதிக் கொடுத்

திட்டுக் காத்திருந்தேன். அப்ப... ஐ.எஸ்.டி. பூத்துக்குள்ளே நின்னுட்டிருந்த ஒரு பெண் 'அருள்'ங்கிற வார்த்தையை அடிக்கடி யூஸ் பண்ணிப் பேசிட்டிருந்தா... அவளைக் கவனிக்க ஆரம்பிச்சேன். அஞ்சு நிமிஷ நேரம் பேசிட்டு பூத்தை விட்டு வெளியே வந்தா. கௌண்டர்க்கு போய் ரசீது வாங்கும் போது நான் பக்கத்துல போய் நின்னேன். கௌண்டரில் இருந்த க்ளார்க் அந்தப் பெண்ணைப் பார்த்து, 'ஏம்மா! ஃப்ராங் ஃபர்ட்டுக்கு பேசிட்டியா''ன்னு கேட்டார்...''

நவமணியின் கண்கள் இடுங்கியது.

''யார் அது...?''

''தெரியலை ஸார்... ஆனா... பின்னாடியே போய் வீட்டைப் பார்த்துகிட்டேன்.''

''எங்கே வீடு...?''

''பெசண்ட் நகர் எக்ஸ்டன்ஷனில் முப்பத்தியேழாம் நெம்பர் வீடு. வீடு பங்களா மாதிரி இருக்கு...''

நவமணி மேஜை மேல் இருந்த கார் சாவியை எடுத்து ஆல் பர்ட்டிடம் வீசினார்.

''ஷெட்ல இருக்கிற காரை எடுத்துட்டு வா... அவ யார்ன்னு விசாரிச்சுட்டு வந்துடலாம்...'' சொல்லிக் கொண்டிருக்கும் போதே டெலிஃபோன் அடித்தது.

* * *

**ஃப்**ராங்ஃபர்ட்.

வீட்டுக்குள் நுழைந்த நிஷாவை மங்களேஷ் ஆர்வமாய் எதிர்கொண்டான்.

''என்ன நிஷா.. போலீஸ் நீ சொன்னதை நம்பிட்டாங்களா?''

''நம்பாமே...? ஸ்டேஷனுக்குப் போய் ஸ்டேட்மெண்டே எழுதிக் குடுத்துட்டு வந்துட்டேன்.''



''எந்தப் பிரச்னையும் வராதே...?''

''வராது... வராது...''

''சரி... திட்டத்தோட அடுத்த கட்டத்துக்குப் போயிடலாமா?''

''ம்.''

இருவரும் டெலிபோனுக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந் தார்கள். மங்களேஷ் ரிஸீவரை எடுத்துக் கொண்டு சென்னையி லிருந்த நவமணியைத் தொடர்பு கொண்டான்.

அவர் லைனில் கிடைத்தார்.

''ஸார்... நான் மங்களேஷ் பேசறேன்...''

''சொல்லு.''

''ஸார்.. எதிர்பார்க்காத சம்பவம் ஒண்ணு நடந்து போச்சு...''

''என்ன...?''

''ஏற்கனவே போட்டிருந்த திட்டப்படி... நான், நிஷா, ஜெயவர்த்தன் மூணு பேரும் ஹாம்ளர் பங்களாவுக்குப் போனோம். ஹாம்ளரைத் துப்பாக்கி முனையில் மிரட்டி - நிலாவை எடுத்துக்கிட்டோம். லேப்பையும் வீட்டையும் தீ வெச்சுக் கொளுத்திட்டோம். ஹாம்ளரும் அவரோட ஃப்ரண்ட் ஒருத்தரும் தீயில் கருகி இறந்துட்டாங்க...''

''சரி.. சொல்ல வந்த விஷயத்தைச் சீக்கிரமா சொல்லு...''

''அது... வந்து ஸார்.. ஹாம்ளரோட வீட்டைக் கொளுத்தற துக்கு முந்தி - நிலாவை ஜெயவர்த்தன்கிட்டே குடுத்து வெளியே கார்ல போய் இருக்கச் சொன்னோம். அவனும் காருக்குப் போனான். நானும் நிஷாவும் வீட்டுக்குத் தீ வைச்சுட்டு வந்து வெளியே பார்க்கிறோம். ஜெயவர்த்தனைக் காணோம்.''

''என்னது...?''

''ஆமா ஸார். ஜெயவர்த்தன் அந்த நிலாவோட காரை எடுத்துக்கிட்டு போயிட்டான். ஹோட்டலுக்கோ நிஷா வீட்டுக்கோ போயிருப்பானோன்னு போய்ப் பார்த்தோம். ஆள் வரலை... நானும் நிஷாவும் ஃப்ராங்ஃபர்ட் பூராவும் வலை வீசித் தேடிப் பார்த்துட்டிருக்கோம்.''

''இப்ப... நீ எங்கிருந்து பேசிட்டிருக்கே...?''

''நிஷா வீட்ல இருந்து...''

''போலீஸுக்கு விஷயம் எதுவும் தெரிஞ்சுடலையே...?''

''இல்லை...''

''சரி... ஹோட்டல் ரூமை நீ காலி பண்ணிட்டு நிஷா வீட்லயே இரு... ரெண்டு மணி நேரம் கழிச்சு மறுபடியும் போன் பண்றேன். என் கையில இப்ப ஒரு துருப்புச் சீட்டு மாட்டியிருக்கு. அதை விசாரிச்சா உண்மை வெளியே வந்துரும்ன்னு நினைக்கிறேன்.''

''துருப்புச் சீட்டா...?''

''ஆமாம்.. இப்ப உன்கிட்டே விளக்கமா சொல்லிட்டிருக்க நேரம் இல்லை. நான் வெளியே கிளம்பிட்டிருக்கேன்.. வந்து போன் பண்றேன்.''

ரிஸீவர் வைக்கப்பட்டுவிட -

மங்களேஷ். நிஷாவை குழப்பமாய் ஏறிட்டான்.

''ஏதோ துருப்புச் சீட்டு அது இதுன்னு மனுஷன் சொல்றாரே... நம்மை ஸ்மெல் பண்ணியிருப்பாரோ?''

''இதோ பாருங்க மங்களேஷ்... நீங்களும் சரி, நானும் சரி. இனிமே நவமணியைப் பத்தி கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. அவராலே இந்த 'நிலா' விஷயத்தைப் போலீஸுக்குக் கொண்டுட்டுப் போக முடியாது.. அவர்



வகையில நமக்கு ஏதாவது தொந்தரவு வர்ற மாதிரி தெரிஞ்சா.''

''தெரிஞ்சா.''

''அவரோட போட்டோவுக்கும் மாலையைப் போட்டுட வேண்டியதுதான்...''

மங்களேஷ் புன்னகைத்து அவளைக் கட்டிக் கொண்டான். ''நிஷா இருக்க எனக்கென்ன பயம்...?''

''கட்டிலுக்குப் போயிடலாமா...?''

இழுத்தாள் நிஷா.

## 11

**சி**ல்வண்டுகள் இரைந்து கொண்டிருந்த அந்த நள்ளிரவு நேரத்தில் பெசண்ட் நகர் எக்ஸ்டன்ஷனுக்குள் கார் நுழைந்தது.

வீடுகள் தூரமாய்த் தெரிந்தன.

காரை ஓட்டிக் கொண்டிருந்த நவமணி கேட்டார்.

''எந்த வீடு...?''

''இதே ரோட்ல போய் லெஃப்ட்ல திரும்பினா... முதல் வீடு ஸார்...'' - பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஆல்பர்ட் சொல்ல - காரை ஓரமாய் நிறுத்திவிட்டு நவமணி இறங்கினார்.

''வா... நடந்து போலாம்...''

நடந்தார்கள்.

சாலை அவ்வளவு ஒழுங்காய் இல்லை. செம்மண் பாதை. பாதையின் இரண்டு பக்கமும் வேண்டாத செடிகள்.

ஒரு நிமிஷ நேரம் நடந்து - இடது புறம் திரும்பினார்கள். தசமி சந்திரனின் வெளிச்சத்தில் டைல்ஸ் பதிக்கப்பட்ட அந்தச் சிறிய பங்களா பார்வைக்குக் கிடைத்தது.

''இதா...?''

''ஆமா ஸார்...''

வெறுமனே சாத்தப்பட்டிருந்த சிறிய காம்பௌண்ட் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனார்கள்.

அழைப்பு மணிக்கு வேலை கொடுத்ததும் - கதவு அந்த வினாடியே திறக்கப்பட்டு சாருமதி நைட் கவுனில் ''என்னங்க... இவ்வளவு நேரம் கழிச்சு வர்றீங்க...?'' என்று சிணுங்கி - நவமணியையும் ஆல்பர்ட்டையும் பார்வையில் வாங்கியதும் திடுக்கிட்டாள்.

''நீ... நீங்க...''

நவமணி ஆல்பர்ட்டிடம் திரும்பினார்.

''இவளா...?''

''ஆமா ஸார்...''

உள்ளே நுழைந்தார். பின் தொடர்ந்த ஆல்பர்ட் கதவைச் சாத்தித் தாழிட்டான். நவமணி பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து - வெள்ளி சிகரெட் கேஸை எடுத்து சிகரெட் ஒன்றை உருவி உள்ளங்கையில் தட்டிக் கொண்டே கேட்டார்.

''உம் பேரென்ன...?''

''......''

''பேர் என்னான்னு கேட்டேன்...''

''சா... சாருமதி....''

''உன்னைத் தவிர இந்த வீட்ல வேற யார் இருக்காங்க...?''

''வேற யாருமில்லை... நான் மட்டும்தான்...''

''வசதியாப் போச்சு...'' - சொன்னவர் அங்கிருந்த சோபாவில் சாய்ந்து சிகரெட் பற்ற வைத்தார்.



''யாரையோ எதிர்பார்த்துக் காத்திட்டிருந்தே போலிருக்கு...?''

''ஆ... ஆமா...''

''யாரை...?''

''அ... அது... வந்து...''

''சொல்லு...''

''ஒரு கஸ்டமரை...''

நவமணியின் நெற்றி சுருங்கியது.

''நீ... 'அந்த மாதிரி'யான பெண்ணா...?''

''தொழிலை நான் பண்றதில்லை... சில பெரிய ஆட்களுக்கு ஏற்பாடு பண்ணித் தர்றதோடு சரி...''

''வீட்ல போன் இருக்கா...?''

''இருக்கு...''

''நான் ஒரு போன் பண்ணிக்கலாமா...?''

''போன் அவுட் ஆஃப் ஆர்டர்.''

''எப்பயிருந்து...?''

''ராத்திரி எட்டு மணியிலிருந்து...''

''அதன் டெலிகிராப் ஆபீஸுக்குப் போய் ஐ.எஸ்.டி. கால் போட்டுப் பேசினியா...?''

சாருமதிக்கு வாய் காய்ந்து விட்டது.

''ஆல்பர்ட்...''

''ஸார்...''

''அதைக் குடு...''

அவன் தன் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து - ரிவால்வரை எடுத்து நீட்ட நவமணி வாங்கிக் கொண்டார்.

''உன்கிட்டேயிருந்து உண்மை மட்டும் வெளியே வந்தா... நீ உயிரோட இருக்கலாம்... இல்லேன்னா நாயைச் சுடற மாதிரி சுட்டுத் தள்ளிட்டு நான் பாட்டுக்குப் போயிட்டிருப்பேன்...''

சாருமதி கும்பிட்டுப் பதறினாள்.

"உண்மையைச் சொல்லிடறேங்க..."

"சொல்லு... டெலிகிராப் ஆபீஸுக்குப் போய் ஐ.எஸ்.டி. கால் போட்டுப் பேசினியா...?"

"ஆமா..."

"எந்த தேசத்துக்கு...?"

"ஃப்ராங்ஃபர்ட்டுக்கு..."

"எங்கே யார் இருக்காங்க..."

"என்னோட அக்கா..."

"அக்காவா...? பொய்...!" ரிவால்வரை உயர்த்தினார் நவமணி.

"நிஜமா அக்காதான்..."

"ஃபோன்ல பேசும்போது 'அருள்'ன்னு சொல்லியிருக்கே...! யார் அந்த அருள்...?"

"அது... அது... என் அக்காவோட பேர்தான்... முழுப் பேர் அருள் நாயகி... நான் கூப்பிடறது... அருள்... நீங்க அனுமதி குடுத்தா... இதை என்னால நிரூபிக்க முடியும்..."

"எப்படி நிரூபிப்பே...?"

"ஃப்ராங்பர்ட்டிலிருந்து என்னோட அக்கா அருள் நாயகி எழுதின லெட்டர் இருக்கு..."

"காட்டு பார்க்கலாம்..."

மேஜையை நோக்கிப் போனாள் சாருமதி. ட்ராயரை இழுத்தாள். காகிதங்களைக் கிளறுவது போல் பாவ்லா செய்து கொண்டே அதற்கு அடியில் இருந்த ரிவால்வரை கண்ணிமைக்கிற நேரத்திற்குள் எடுத்து -

நவமணியின் மார்புக்கு உத்தேசமாய்க் குறி வைத்து ட்ரிக்கரைச் சுண்டுவதற்குள் -



நவமணியின் கையில் இருந்த ரிவால்வர் முந்திக் கொண்டது. சைலன்ஸர் வசதியோடு சீறியது.

சாருமதி மார்பில் உடனே ரத்தத்தைக் காட்டிக் கொண்டு இரண்டாய் மடிந்து மல்லாந்தாள்.

ஆல்பர்ட் முன்னால் ஓடிவந்தான்.

"ஸார்... அவசரப்பட்டுட்டீங்க... அவகிட்டயிருந்து நாம விஷயத்தை வாங்கவேயில்லை..."

"நான் சுடாமே இருந்திருந்தா... அவ உன்னையும் என்னையும் சுட்டுத் தள்ளியிருப்பா..."

"இப்ப என்ன ஸார் பண்றது...?"

"செத்துட்டாளான்னு பாரு..."

ஆல்பர்ட் மல்லாந்து கிடந்த சாருமதியை நெருங்கி சோதித்துப் பார்த்துவிட்டு நிமிர்ந்தான்.

"செத்துட்டா ஸார்..."

"சரி... எதையும் தொடாமே கிளம்பு..."

வெளியே வந்தார்கள்.

## 12

**அ**ருள் ஆச்சர்யப்பட்டான்.

'ஹோட்டல் அறையில் மங்களேஷ் மட்டும்தானே தங்கியிருக்கிறான். ஜெயவர்த்தன் எங்கே...?'

'கடந்த இரண்டு நாட்களாய் அவன் கண்ணில் படவே இல்லையே?'

எதிர்ப்புற ஹோட்டலில் இருந்து - பைனாகுலர் வழியாக மங்களேஷ் தங்கியிருந்த அறையைக் கண்காணித்துக் கொண்டிருந்தான் அருள்.

மனசுக்குள் சின்னச் சின்னதாய்க் குழப்பம்.

'சாருமதியின் வீட்டு ஃபோன் இன்னமும் அவுட் ஆஃப் ஆர்டரிலேயே இருக்கிறது. அந்த போனை அவள் சரி செய்யவும் இல்லை. டெலிகிராப் ஆபீஸிலிருந்து எனக்கு போன் பண்ணவும் இல்லை.'

'நவமணிக்கு போன் செய்தால் ரிஸீவரை எடுக்க ஆளின்றி ரிங் போய்க் கொண்டே இருக்கிறது...'

'என்னாயிற்று...?'

குழப்பங்களோடு - பைனாகுலரில் மங்களேஷைக் கண்காணித்துக் கொண்டிருந்த அருள், லேசாய் பதட்டப்பட்டான்.

'பயல் துணிமணிகளை மடித்து - சூட்கேஸில் அடுக்கி வைக்கிறான். அறையைக் காலி செய்கிறானா...?'

'காலி செய்துவிட்டு எங்கே போகிறான்...?'

'இங்கேயே வேறு ஏதாவது ஹோட்டலுக்கா...? இல்லை இந்தியாவுக்குப் பயணமா...?'

'பின் தொடர்ந்து பார்த்துவிட வேண்டியதுதான்...'

பரபரவென்று ட்ரஸ் செய்து அறையைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தான். ஹோட்டல் வாசலிலேயே டாக்ஸி ஒன்றை அமர்த்திக் கொண்டு காத்திருந்தான். வெளிச்சம் மறைந்து கொண்டிருந்த மாலை நேரம் அது.

அருள் மணிக்கட்டில் நேரம் பார்த்தான்.

6.35.

அடுத்த சில நிமிடங்களுக்குள்ளாகவே - மங்களேஷ் வெளிப்பட்டு காத்திருந்த டாக்ஸியில் ஏற - லக்கேஜ்கள் டிக்கியில் திணிக்கப்பட்டன.



டாக்ஸி நகர்ந்தது.

அருள் தன்னுடைய டாக்ஸி ட்ரைவரின் தோளைத் தொட்டான்.

"அந்தக் காரை ஃபாலோ பண்ணு."

டாக்சி தொடர்ந்தது.

நகரம் பூராவும் நியான் வெளிச்சத்தில் இருந்தது. திரும்பிய திசையெல்லாம் விளம்பர போர்டுகள். ஜெர்மன் எழுத்துக்களை - வர்ண வர்ணமாய் எழுதி - அவசர அவசரமாய் அழித்தது. எழுதியது. அழித்தது. எழுதியது.

"ட்ரைவர்...! அந்த டாக்சியைத் தவற விட்டுவிட்டுடாதே..."

அவன் சிரித்தான்.

"பயப்படாதீர்கள். அது என் பார்வையை விட்டு விலகாது..."

மங்களேஷ் இருந்த டாக்சி வேகம் எடுத்து இருபது நிமிடங்களைப் பயணத்தில் கரைத்து நகர்ப்புற எல்லையைத் தாண்டியது.

அருள் வியந்தான்.

'எங்கே போகிறான்... இவன்...?'

'நிஷாவின் வீட்டுக்குப் போக வேண்டுமென்றால் எதிர்த் திசையில் அல்லவா இவன் போக வேண்டும்...?'

அருள் யோசித்துக் கொண்டிருக்கும்போதே -

மங்களேஷின் டாக்சி - அந்த அவென்யூவின் ஓரமாய் ஒதுங்கி நின்றது. அருள் ட்ரைவரின் தோளைத் தொட்டான்.

"இப்படியே நிறுத்திக்க..."

கார் மறைவாய் ஒதுங்கியது.

"வெயிட்டிங் போடட்டுமா...?"

"வேண்டாம்... நீ கிளம்பு..." மீட்டர் பார்த்து மார்க்ஸை எண்ணிக் கொடுத்துவிட்டு - லக்கேஜ்களோடு நடக்க ஆரம்

பித்து விட்ட மங்களேஷை சாலையோர இருட்டில் பின் தொடர ஆரம்பித்தான் அருள்.

சிமெண்ட் ஸ்லேப்ஸ் பதித்த அந்தக் குறுகலான பாதையில் சற்று தூரம் நடந்ததுமே - அந்த வீடு தென்பட்டது.

தனி வீடு. வாசலில் பெயர் தெரியாத ஒரு மரம். ஆஜானு பாகுவாய் வளர்ந்து கிளைகளைப் பரப்பியிருந்தது.

மங்களேஷ் இரண்டு சூட்கேஸ்களோடு - வீட்டின் சிறிய காம்பௌண்ட் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனான்.

அருள் சுவர்க்குப் பின்னால் ஒண்டிக் கொண்டான். தலையை மட்டும் மெல்ல நீட்டி எட்டிப் பார்த்தான்.

மங்களேஷ் காலிங் பெல்லை அழுத்திவிட்டுக் காத்திருக்க - கதவு திறந்தது. கதவைத் திறந்தவள் -

நிஷா.

சம்பாஷணை கேட்டது.

''என்ன... ஹோட்டல் ரூமைக் காலி பண்ணிட்டீங்களா...?''

''பண்ணியாச்சு...''

''உள்ளே வாங்க...''

மங்களேஷ் உள்ளே நுழைந்ததும் - கதவு சாத்தப்பட்டது. அருள் இருட்டில் உட்கார்ந்தபடியே யோசித்தான்.

'இந்த வீடு யாரோடது...?'

'நிஷாவும், மங்களேஷும் இங்கே எதற்காக வந்திருக் கிறார்கள்..? இந்தக் கேள்விகளுக்குப் பதிலைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றால் வீட்டுக்குள் நுழைவதைத் தவிர வேறு வழி இல்லை...'

அருள் காம்பௌண்ட் சுவரையொட்டிக் கொட்டியிருந்த இருட்டில் மெதுவாய் நடந்து வீட்டின் பின்பக்கம் வந்தான்.

சுவர் அவ்வளவு உயரமாக இல்லை.



ஏறிக் குதித்தான்.

மெத்தென்று பரப்பியிருந்த தோட்ட மணலில் குதித்த சத்தமே கேட்கவில்லை. அரை நிமிஷ நேரம் நின்று சுற்றுப் புறத்தைக் கவனித்துவிட்டு - மெல்ல நடந்து பின் பக்கக் கதவுக்கு வந்து கதவின் மேல் கையை வைக்கத் திறந்து கொண்டது.

உள்ளே பேச்சுக்குரல் ஏதாவது கேட்கிறதா என்று தலையை நீட்டி காதுகளுக்கு உன்னிப்பைக் கொடுத்தான்.

எதுவும் கேட்கவில்லை.

உள்ளே நுழைந்தான்.

பிடரியில் சில்லென்று ஒரு ஸ்பரிசம்.

அருள் திடுக்கிட்டுத் திரும்ப -

மங்களேஷ் கையில் துப்பாக்கியோடு நின்றிருந்தான்.

## 13

மங்களேஷ் சிரித்தான்.

''ஏதாவது பேசறதா இருந்தால் வீட்டுக்கு முன் பக்கமாகவே வந்திருக்கலாமே அருள்...''

நிஷா உள்ளேயிருந்து குரல் கொடுத்தாள்.

''வா... அருள்... உள்ளே வா...''

மங்களேஷ் பின்பக்கமிருந்து நெட்டித் தள்ள - அருள் தயக்கமாய் உள்ளே நுழைந்தான். நிஷா ஒரு பீர் பாட்டிலைக் கவிழ்த்து மூன்று டம்ளர்களை நிரப்பிக் கொண்டிருந்தாள். நைட்டி மாதிரியான ஒரு ட்ரஸ்.

"உட்கார் அருள்..."

"............"

"ம்... உட்கார்.... ஏன் பயப்படறே...?"

அருள் வியர்த்த முகமாய் எச்சில் விழுங்கிக் கொண்டே உட்கார்ந்தான். பக்கத்து நாற்காலியில் மங்களேஷ் சாய்ந்தான். கேட்டான்.

"ஃப்ராங்ஃபர்ட்டுக்கு வந்து ரெண்டு நாளாச்சு போலிருக்கே...?"

"............"

"கேட்டது காதுல விழலையா அருள்...?" கையிலிருந்த துப் பாக்கியால் அருளின் தோள் பட்டையைத் தட்டினான் மங்களேஷ்.

அருள் அவசர அவசரமாய்த் தலையாட்டினன்.

"ஆ... ஆமா... ரெண்டு நாளாச்சு..."

"நீயாவே புறப்பட்டு வந்தியா...? இல்ல...?"

"நவமணி அனுப்பிச்சு வெச்சார்..."

"எதுக்காக...?"

"உங்க ரெண்ட பேரையும் அவர் நம்பலை... கண்காணிக் கறதுக்காக என்னை அனுப்பிச்சார்...'

"பீர் சாப்பிடறியா...?"

"வேண்டாம்..."

"சாப்பிடு...! தொண்டையெல்லாம் உலர்ந்து போயிருக்கும். நாங்க கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் நீ தெம்பா பதில் சொல்ல வேண்டாமா...?"

அருளுக்கு ஒரு டம்ளர் பீரைக் கொடுத்துவிட்டு - தான் ஒன்றை எடுத்துக் கொண்டு - மங்களேஷிடம் ஒன்றை நீட்டி னாள் நிஷா.



அருள் ஒருவாய் குடித்துவிட்டு, "நவமணி சொல்லித்தான் உங்களைக் கண்காணிக்க வந்தேன். என்னை ஒண்ணும் பண் ணிடாதீங்க..." என்றான்.

"ஒரு பாஸ் சொன்னார்ன்னா... நீ கேட்டுத்தான் ஆகணும். அதுல தப்பே இல்லை. இந்த வீட்டுக்கு கூட்டிட்டு வந்து விஷயம் என்னான்னு தெரிஞ்சுக்கத்தான் நீ ஃபாலோ பண் ணும்படியா டாக்ஸியில வந்தேன்... இந்த வீடும் நிஷாவுக்குச் சொந்தமானதுதான்...! சில தனிப்பட்ட காரியங்களுக்காக நிஷா இந்த வீட்டைப் பயன்படுத்திக்கிட்டு இருக்கா..."

நிஷா டம்ளர் பீரை ஒரே மூச்சில் குடித்துவிட்டு வாயை இடது புறங்கையால் துடைத்தபடி அருளை ஏறிட்டாள்.

"அருள்! உன்கிட்ட இப்ப சில உண்மைகளைச் சொல்லப் போறேன். அந்த உண்மைகளை நீ அப்படியே நவமணிக் கிட்டே போய் சொல்லலாம்... முதல் உண்மை... ஜெயவர்த்தன் இப்போ உயிரோட இல்லை."

அருள் அதிர்ந்தான்.

நிஷா புன்னகைத்தாள்.

"பார்த்தியா...? முதல் உண்மையைச் சொன்னதுமே உன் கைவிரலெல்லாம் நடுங்குது... மொதல்ல பீரை முழுசாக் குடி. அப்பத்தான் தைரியம் வரும்..."

அருள் பீரைக் குடித்து காலி டம்ளரை - டீபாயின் மேல் வைத்தான்.

நிஷா தொடர்ந்தாள். "ரெண்டாவது உண்மை நானும் மங்களேஷும் சீக்கிரமே கல்யாணம் பண்ணிகிட்டு இதே தேசத்துல செட்டில் ஆகப் போறோம்... மூணாவது உண்மை மெட்டலார்ஜிஸ்ட் ஹாம்ளர்கிட்டே இருந்த நிலா தனுக்கு இப்ப எங்ககிட்ட இருக்கு. நாலாவது உண்மை. அந்த நிலா

துணுக்கை வச்சுகிட்டு இதே வீட்ல தங்கத்தை உற்பத்தி பண்ணப் போறோம்..."

மங்களேஷ் குறுக்கிட்டான்.

"நீ எங்களைக் கண்காணிச்சுத் தெரிஞ்சுக்க வேண்டிய உண்மைகளை உன்னை உட்கார வெச்சு பட்டியல் போட்டு சொல்லிட்டோம். நீ இன்னிக்கே மெட்ராஸுக்குக் கிளம்பிப் போய் நவமணிகிட்டே இந்த உண்மைகளையெல்லாம் சொல்லலாம்... எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை."

அருள் தயக்கமாய் எழுந்தான்.

"நான் போலாமா...?"

"தாராளமாய்... ஆனா... ஒரே ஒரு கண்டிஷன்."

"எ... என்ன...?"

"நீ வெளியே போகும்போது வெறுங்கையோடு போகக் கூடாது. நாங்க தர்ற எதையாவது வாங்கிட்டுத்தான் போகணும்..."

அருள் விழிக்க,

மங்களேஷ் நிஷாவிடம் கேட்டான்.

"அருளுக்கு என்ன கொடுத்து அனுப்பலாம்...?"

நிஷா சிரித்தாள்.

"ஒரு தோட்டாவைக் குடுத்து அனுப்புங்களேன்..."

"நானும் அதைத்தான் நினைச்சேன்..." சொன்ன மங்களேஷ் கண்ணிமைக்கிற நேரத்திற்குள், கையில் மறைவாய் வைத்திருந்த பிஸ்டலை உயர்த்தி வெகு கிட்டத்தில் அருளின் மார்பைச் சுட்டான்.

ரத்தம் கொப்பளிக்க டீபாயின் மேல் சரிந்து கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கினான் அருள்.



## 14

மங்களேஷ் சிரித்தான்.

"சாகிறதுக்காகவே மெட்ராஸிலிருந்து ஃப்ராங்ஃபர்ட்டுக்கு வந்திருக்கான்."

நிஷா அவனை ஏறிட்டாள்.

"பாடியை உடனே டிஸ்போஸ் பண்ணிடலாம்... ராத்திரி பத்து மணிக்கு மேல்தான் போலீஸ் கெடுபிடி இங்கே அதிகம்..."

"பாடியை எங்கே கொண்டு போய் டிஸ்போஸ் பண்றது?"

"ஒலிம்பியா ஹில்ஸுக்கு போயிடலாம்... மொதல்ல அவனை அந்த பழைய சூட்கேஸில் அடைங்க..."

மங்களேஷ் கொஞ்சம் சிதிலமாய் தெரிந்த அந்தப் பழைய பெரிய சூட்கேஸைக் கொண்டு வந்து தரையில் வைத்து அதன் வாயைப் பிளந்தான்.

உள்ளே -

ஒரு சின்னத் தொட்டிக்குரிய ஆழம்.

ரத்தத்தில் நனைந்து போயிருந்த அருளைத் தூக்கி, சூட்கேஸுக்குள் மடித்துத் திணித்தான். மூடியை 'டப்'பென்று அடித்து 'லாக்' செய்தான்.

நிஷா கார் சாவியை எடுத்துக் கொண்டாள்.

"கிளம்பலாமா?"

மங்களேஷ் பதில் சொல்வதற்குள் -

பின்பக்கம் குரல் கேட்டு இருவரும் திரும்பினார்கள்.

நவமணியும் ஆல்பர்ட்டும் நின்றிருந்தார்கள்.

# 15

இரண்டு பேர்களின் கைகளிலும் குட்டி குட்டியாய் எந்திரத் துப்பாக்கிகள், ஃப்ராங்ஃபர்ட்டுக்கு வந்து வாங்கியிருக் கிறார்கள். விலை லேபிள் ஒட்டப்பட்டிருந்தது தெரிந்தது.

கறை பற்களைக் காட்டிச் சிரித்தார் நவமணி.

"வணக்கம் துரோகிகளே!"

மங்களேஷ் பளிச்சென்று பாய்ந்து - டீபாய் மேல் இருந்த ரிவால்வரை எடுக்க முயல - ஆல்பர்ட் பாய்ந்து எட்டி உதைத் தான்.

லாடம் பதித்த முரட்டு ஷூ மங்களேஷின் மோவாயை 'நெக்'கென்று இடிக்க, வாய்க்குள் ரத்தம் உடனே புளித்தது.

"கெட் பேக்."

இரண்டு பேரும் சுவரோரமாய் நிறுத்தப்பட்டார்கள். நவமணி சோபாவுக்கு வந்து வசதியாய் சாய்ந்து கொண்டார்.

"அருள்... உன்னை ஃபாலோ பண்ணினான். நான் அவனை ஃபாலோ பண்ணினேன். என்ன ரெண்டு பேரும் அப்படிப் பார்க்கறீங்க...? நானும் ஆல்பர்ட்டும் ஃப்ராங்ஃபர்ட்டுக்கு வந்து முழுசா ஒரு நாள் ஆகுது."

மங்களேஷ் ஏதோ பேச வாயெடுத்த விநாடி நவமணி கையமர்த்தினார். "நீயும் சரி... நிஷாவும் சரி... எதையுமே சொல்ல வேண்டாம்... நீங்க ரெண்டு பேரும் அருள்கிட்ட சொன்னதையெல்லாம் கேட்டுகிட்டுதான் பின்னாடி நின்னுட் டிருந்தேன். எனக்கு வேண்டியது. உங்களோட விளக்கங்கள் இல்லை. அந்த நிலா..."



இருவரும் மௌனித்தார்கள்.

நவமணி கேட்டார்.

"நிலா... எங்கே...?"

மறுபடியும் மௌனம்.

நவமணி ஆல்பர்ட்டுக்கு கண்ணைக் காட்ட - அவன் நிஷாவின் அருகில் போய் - துப்பாக்கியின் பின்பக்கத்தைத் திருப்பி அவளுடைய கன்னத்தில் ஓங்கி அடித்தான்.

தலைக்குள் ஒரு பிரளயம் நிகழ -

மூக்குத் துவாரங்களை அடைத்துக் கொண்டு ரத்தம் வெப் மாய் வழிந்தது. மங்களேஷ் வீறிட்டான்.

"அவளை அடிக்காதே..."

நவமணி எழுந்தார். "உன் வருங்கால மனைவி ரத்த சிந்தக்கூடாதுன்னு நீ நினைச்சா.. இன்னும் ஒரு நிமிஷ நேரத் துக்குள்ளே அந்த நிலா என் கைக்கு வரணும்..."

"அந்த ரூம்ல இருக்கு... நான் எடுத்துட்டு வர்றேன்..."

நகர முயன்றவனை நிறுத்தினார் நவமணி. "நீ அசையாமே அங்கேயே நில்லுடா கண்ணா...! எங்கே வெச்சிருக்கேன்னு சொல்லு... ஆல்பர்ட் போய் எடுத்துட்டு வருவான்..."

"அலமாரியில் ஒரு ப்ரீஃப்கேஸ் இருக்கு... அதுக் குள்ளே..." மங்களேஷ் சொல்லிக் கொண்டிருக்கும்போதே - ஆல்பர்ட் பக்கத்து அறைக்குள் நுழைந்து, அலமாரியில் இருந்த ப்ரீஃப்கேஸை எடுத்துக் கொண்டு வந்தான்.

நவமணிக்கு முன்னால் வைத்துத் திறந்தான்.

உள்ளே -

அந்த பழுப்பு நிற நிலா பாறைத் துணுக்கும் தேனிரும்புத் துண்டுகளைத் தங்கமாய் மாற்றக் கூடிய வழிமுறை தாள்கள் அடங்கிய ஃபைலும் தெரிந்தன.

''இது போதும்...''

சிரித்த நவமணி ஆல்பர்ட்டுக்குக் கண்ணைக் காட்ட - அவன் கையில் வைத்திருந்த குட்டி எந்திரத் துப்பாக்கியை நிஷா, மங்களேஷ் பக்கம் திருப்பினான்.

''நோ... ஓ... ஓ... ஓ...''

அவர்கள் அலறிக் கொண்டிருக்கும்போதே -

துப்பாக்கியின் விசையைத் தட்டினான்.

''டப்... டப்... டப்...'' என்று டைப்ரைட்டிங் மெஷினைத் தட்டுவது போலச் சத்தம். வீரியம் நிறைந்த சின்னச் சின்ன துப்பாக்கி ரவைகள் மங்களேஷ், நிஷா உடம்புகளில் போய் புதைய - கவர்களின் முதுகுகளைத் தேய்த்துச் சரிந்தார்கள்.

அடங்கினார்கள்.

## 16

**ந**வமணி ஆல்பர்ட்டை ஏறிட்டார்.

''அந்த ரெண்டு நாய்களும் செத்துடுச்சா... இல்லையான்னு கன்ஃபார்ம் பண்ணிக்க...''

ஆல்பர்ட் புரட்டிச் சோதித்துவிட்டு ''செத்துட்டாங்க ஸார்...'' என்றான்.

''சரி... வெளியே போய் ஆள் நடமாட்டம் இருக்கான்னு பாரு...''

போய் பார்த்தான்.

ஆள் நடமாட்டம் அறவே இல்லை... நிலக்கரியாய் இருட்டு. நிசப்தம்.



உள்ளே வந்தான்.

''ஆள் நடமாட்டம் சுத்தமா இல்லை...''

''நிஷா கையில இருக்கிற அவளோட கார் சாவியை எடுத்துக்கோ. மூணு பாடியையும் கார் பின் சீட்ல கிடத்தி - ஒலிம்பியா ஹில்ஸுக்கு கொண்டு போய் உருட்டி விட்டுட்டு நாம் அடுத்த ஃப்ளைட்லேயே மெட்ராஸ் கிளம்பிப் போயிட வேண்டியதுதான்.. ஒலிம்பியா ஹில்ஸிலிருந்து ஒரு கார் விழுந்து நொறுங்கினா.. அதை மீட்க போலீஸாலே முடியாதுன்னு எனக்குத் தெரியும்... எந்த ஜென்மத்திலும் இந்த மூணு பேரோட மரணங்கள் வெளியே வரப் போறதில்லை...''

''ஸார்...! சூட்கேஸில் உள்ள அருளோட பாடியை டிக்கியில் போட்டு வெச்சுட்டு, மங்களேஷ், நிஷாவோட பாடிகளை காரோட பின் சீட்டுக்குக் கீழே போட்டுக்கலாம் ஸார்...''

''சரி... செய்...''

செயல்பட்டான் ஆல்பர்ட்.

பத்தே நிமிஷம்.

அருள் டிக்கிக்குள்ளும், மங்களேஷ், நிஷா காரின் பின் சீட்டுக்குக் கீழேயும் திணிக்கப்பட்டார்கள்.

எட்டுமணி இருட்டில் கார் கிளம்பியது.

## 17

**கா**ரை ஓட்டிக் கொண்டிருந்த ஆல்பர்ட் கேட்டான். வைப்பர்கள் முன்புறக் கண்ணாடியின் பனியைத் துடைத்தது.

''ஒலிம்பியா ஹில்ஸ் இங்கிருந்து எவ்வளவு தூரம் ஸார்...?''

''சுமார் முப்பது கிலோ மீட்டர்'' - நிலாப் பாறை இருந்த சூட்கேஸை மடியில் வைத்துக் கொண்டிருந்த நவமணி சொன்னார்.

''வழியில் போலீஸ் வண்டியை நிறுத்தி சோதனை போட ஆரம்பிச்சா மாட்டிக்குவோம் ஸார்...?''

''இந்த ரோட்ல போலீஸ் சோதனை இருக்காது... நீ பாட்டுக்கு ஆக்ஸிலேட்டரை மிதி.''

கார் பறந்தது. பனி ஈரத்தில் ரோடு வெண்ணெய்க் கட்டியாய் மாறியிருந்தது. அடர்த்தியாய் கொட்டி வைத்திருந்த இருட்டில் ரோடு நடுவில் மஞ்சள் பெயிண்ட் கோட்டோடு நீளமாய் வந்து கொண்டிருக்க அடுத்த பதினைந்து நிமிடத்தில் காட் ரோடு ஆரம்பமாகி சூழ்நிலையை மாற்றியது. மரங்கள் குளிர் காற்றில் 'ஹோ'வென்ற இரைச்சலோடு கடந்தன.

''ஸார்...''

ஆல்பர்ட்டின் குரல் நடுங்கியது.

''என்ன...?''

''காரைத் தள்ளி விட்டுட்டு நாம எப்படி எதுல திரும்பப் போறோம்...?''

''கவலைப்படாதே! ஒலிம்பியா ஹில்ஸின் அந்தப் பக்கச் சரிவில் ஒரு கிராமம் இருக்கு. அங்கே போனா ட்ரக் ஏதாவது கிடைக்கும்.''

கார் காட் ரோட்டின் வளைவுகளில் திரும்பி - அரை மணி நேரப் பயணத்திற்குப் பிறகு ஒரு கணிசமான உயரத்தை எட்டிப் பிடித்திருந்த போது - நவமணி ஆல்பர்ட்டின் தோளைத் தொட்டார்.

''காரை வலது பக்கமா ஒதுக்கி நிறுத்து.''

ஆல்பர்ட் நிறுத்தினான்.



கையில் நிலவுப் பாறை இருந்த சூட்கேஸோடு - நவமணி கீழே இறங்கினார். சுற்றும் முற்றும் பார்த்தார்.

குளிர், இருட்டு, நிசப்தம் மூன்றும் உச்சத்தில் இருந்தன.

''ஆல்பர்ட்...''

''ஸார்...''

''அங்கே ஒரு போர்டு தெரியுது... என்னான்னு பாரு...''

அவன் பேனா டார்ச்சை எடுத்து வெளிச்சத்தைப் பிதுக்கி - போர்டு மேல் அடித்தான். **'ACCIDENT SPOT, BEWARE OF YOUR DRIVING'** எழுத்துக்கள் தெரிந்தது.

ஆல்பர்ட் மலர்ந்தான்.

''ஸார்... இது ஒரு ஆக்ஸிடெண்ட் ஸ்பாட்னு ஒரு அறிவிப்பையே வெச்சிருக்காங்க... முன்னாடி பாருங்க... அதல பாதாளம் மாதிரித் தெரியுது...''

இருவரும் முன்னால் நகர்ந்து எட்டிப் பார்த்தார்கள்.

நட்சத்திர வெளிச்சத்தில் சரிவு பயங்கரமாய்க் காட்சியளித்தது.

''காரை இதுல தள்ளிவிட்டுட வேண்டியதுதான்...''

நவமணி சொல்லிக் கொண்டிருந்த அதே விநாடி -

## 18

நிறுத்தப்பட்டிருந்த காரின் சக்கரங்களுக்குக் கீழே பனி பெய்த ஈரம் ஒரு வழவழப்பைக் கொடுத்தது. டயர்களுக்கு விடுதலை வழங்கிக் கொண்டிருக்க -

கார் பிடிப்பில்லாமல் கீழ்நோக்கி நகர்ந்தது. பத்தடி நகர்ந்ததும் சரிவு ஆரம்பமாக - பின் சக்கரங்கள் வேகமாய் வழுக்கி - சரிவைக் குறி வைத்து -

ரோட்டில் - ஜிவ்வென்று இறங்க -

எதற்கோ திரும்பிப் பார்த்த ஆல்பர்ட் வீறிட்டான்.

''ஸ... ஸார்... கார்...'' 31520

சரிவின் நுனியில் நின்றிருந்த நவமணி திடுக்கிட்டு விலகி ஓடுவதற்குள் அவரையும், ஆல்பர்ட்டையும் காரின் எஃகு உடம்பு மோதியது. அசுரத்தனமான அடி.

''த்த்த்ட்டடட்ட்ட...'' 031,3NR,HP7

இருவரும் சிதறினார்கள். கார் தலைகுப்புற சரிவில் கவிழ்ந்து உருண்டது.

நவமணியின் கையிலிருந்த ப்ரீஃப்கேஸ் ஒரு பாறையின் மேல் மோதி பிளந்துகொள்ள - உள்ளே இருந்த நிலவுப் பாறைத் துணுக்கு வெளிப்பட்டு, இறந்த உடல்களோடு பாதாளச் சரிவை நோக்கி உற்சாகமாய்ப் போய்க் கொண்டிருந்தது.